# பாதைக்கு வெளிச்சம்

தமிழ் மாத இதழ்


# PATHAIKKU VELICHHAM

Tamil Monthly Magazine

அக்டோபர் 2025 பாதை : 10 வெளிச்சம் : 6 வருட சந்தா : ₹100/-

October 2025 Volume : 10 Issue : 6 Annual Subscription : ₹100/-


## நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,



தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக,

## உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோமர் 12:2




# வெளிச்சத்தைக் கண்டவன் விளம்புகிறதாவது...

## அதிசீக்கிரத்தில் வருகிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவிகளை இரட்சிக்க ஒருவிசை பூமிக்கு வந்தார். **"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்"** (மாற்கு 16:16) என்ற வசனத்தின்படி, யார் ஒருவர் மனந்திரும்பி, பாவங்களை இயேசுவிடம் அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். அப்படி இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்க்கிறார் என்று அப். 2:47 ல் வேதம் கூறுகிறது. மறுபடி சீக்கிரத்தில் இயேசு வருகிறார். இயேசு வருவதற்கு முன்னால் நடக்கும் என்று சொன்ன அடையாளங்களெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. அவர் நினையாத நாழிகையிலே வருவார் (மத். 24:44). அப்படி வரும்போது அவருடைய வருகையிலே அவரைத் தரிசிக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். **"தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்"** (எபி. 9:28) என்ற வசனத்தின்படி, அவரைத் தரிசிக்கத்தக்க அளவிற்கு யார் காத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் அவரைத் தரிசிக்க முடியும். **"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"** (எபி. 12:14) என்ற வசனத்தின்படி, இயேசுவைத் தரிசிக்க வேண்டுமென்றால், அவரைத் தரிசிக்கத்தக்கதான பரிசுத்தம் அதாவது கர்த்தர் சிநேகிக்கிறதான பரிசுத்தம் தேவை (மல். 2:11). **"தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்"** (எபே. 5:26,27) என்ற வசனங்களின்படி, இப்படிப்பட்ட பரிசுத்தம் நமக்குத் தேவை. இப்படிப்பட்ட பரிசுத்தம் நாம் அடைவது எப்படி?

1. சத்தியத்தினால் - **"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்"** (யோவான் 17:17) என்ற வசனத்தின்படி, வசனத்தின்படி வாழ்ந்தால் மாத்திரமே தேவனுக்கேற்ற பரிசுத்தம் அடைய முடியும். **"கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்"** (பிலி. 2:15,16) என்ற வசனங்களின்படி, எந்த வசனத்திற்கும் தர்க்கம் பண்ணாமலும் முறுமுறுக்காமலும் கீழ்ப்படிந்து செயல்படும்போது தேவனுக்கேற்ற பரிசுத்தம் அடையலாம். ஆகவே அருமையானவர்களே கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை அடைந்து அவரைத் தரிசிக்க விரும்புவீர்களானால் எந்த வசனத்தையும் கடினமாயிருக்கிறதென்று தள்ளாமல், முறுமுறுக்காமல் தர்க்கம் பண்ணாமல் செய்யுங்கள்.

2. அவிசுவாசிகளை விட்டு பிரிந்து வாழ்வதால் - **"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்"** (லேவி. 20:26) என்ற வசனத்தின்படி, தேவனுக்கேற்ற பரிசுத்தத்தை அடைய அவிசுவாசிகளை விட்டுப் பிரித்தெடுக்க விரும்புகிறார். பாவிகளை இரட்சிக்க வந்த இயேசு, பாவிகள் வீட்டில் சாப்பிட்டார், பாவிகளுக்கு உபதேசித்தார், பாவிகளுக்காக ஜீவனையும் கொடுத்தார். அப்படிப்பட்ட இயேசு பாவிகளுக்கு விலகியிருந்தார் (எபி. 7:26). இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்ட தேவன் கானானியரோடுகூட ஐக்கியம் கொள்ளாமல் அவர்களை அழிக்கும்படி சொன்னார். ஆனால் இஸ்ரவேலரோ அவர்களை அழிக்காமல் அவர்களோடுகூட ஐக்கியமாகி அவர்கள் கிரியைகளை கற்றுக்கொண்டார்கள் (சங். 106:35,36). இதனால் நடந்தது என்ன? **"அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள். அதினால் கர்த்தருடைய கோபம் தமது ஜனத்தின்மேல் மூண்டது; அவர் தமது சுதந்தரத்தை அருவருத்தார்"** (சங். 106:39,40). தேவனை விட்டு விலகிப்போனார்கள். இதினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மேல் கோபம் கொண்டார். அருமையானவர்களே, கர்த்தரைத் தரிசிப்பதற்கேற்ற பரிசுத்தம் அடைய, அவிசுவாசிகளை விட்டு விலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

3. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும் - **"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்"** (மத். 5:8) என்ற வசனத்தின்படி, வரப்போகிற இயேசுகிறிஸ்துவை தரிசிக்க வேண்டுமென்றால் இருதயத்தில் (எண்ணத்தில்) பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அருமையானவர்களே, மனுஷருடைய இருதயத்தை யாரும் பார்க்க முடியாது. ஆனால் அசுத்தமான எண்ணங்களை கொண்டுவரும்படி சாத்தான் வாஞ்சிப்பான். அப்படி சத்துரு தேவையற்ற எண்ணங்களை கொண்டுவருவானானால் நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்க, **"அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்"** (2 கொரி. 10:5) என்ற வசனத்தின்படி, எந்த அசுத்தமான எண்ணத்தையும் சிறைப்படுத்துகிறவர்களாயிருந்து இருதயத்தை சுத்தமுள்ளதாய் காத்துக்கொள்ள வேண்டும். பத்து கன்னிகைகளிலே 5 கன்னிகைகள் ஆயத்தமுள்ளவர்களாயிருந்து இயேசுவை தரிசித்ததுபோல, இயேசு வரும்போது அவரைச் சந்திப்பதற்கு வசனத்தின்படியே பரிசுத்தமாய் வாழ்ந்து, அவிசுவாசிகளை விட்டுப் பிரிந்து, இருதயத்தை சுத்தமாய் காத்துக்கொண்டு அவரைச் சந்திக்க ஆயத்தமாவோம். கர்த்தர் வருகிறார்.
மாரநாதா!!

*கர்த்தரின் வேலைக்காரன்,*

*P அற்புதராஜ் சாமுவேல்*

# இயேசுவுக்காகப் பிழைப்பவன் எப்படி இருப்பான்? - பாகம் - 4

பிரியமானவர்களே, ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதத்திலே இயேசுவுக்காகப் பிழைப்பவன் எப்படி இருப்பான்? என்கிற தலைப்பின் கீழ் அதின் மூன்றாம் பகுதியை நாம் தியானித்தோம். இந்த மாதம் அதனுடைய கடைசிப் பகுதியைத் தியானிக்கப் போகிறோம். 2 கொரிந்தியர் 5:14 "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்" வேதம் சொல்லுகிறது கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்று. நாம் பாவம் செய்தோம். அதற்காக நாம் எல்லாரும் மரித்திருக்க வேண்டும், ஆனால் நம் எல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். அதோடுமாத்திரமல்ல கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்று சொன்ன பவுல் இப்படிச் சொல்லுகிறார். 2 கொரிந்தியர் 5:15 "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்". இப்பொழுது பாவத்தின் சம்பளம் மரணம். நாம் எல்லாரும் நரகத்திற்குச் சென்றுவிடுவோம். எனவே அவர் என்ன செய்தார்? பாவத்தில் மரித்துக் கிடந்த நம்மை தம்முடைய ஜீவனையேக் கொடுத்து மீட்டெடுத்தார், ஆகவே இப்பொழுது நாம் பிழைத்திருக்கிறோம். இப்பொழுது பிழைத்திருக்கிற நாம் நமக்கென்று பிழைத்திராமல் நமக்காக ஜீவனைக் கொடுத்த, நமக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த அவருக்கென்றே பிழைத்திருக்கும்படி நாம் நிதானித்து வாழ வேண்டும், இப்படிப்பட்ட தேவனுடைய அன்பை ருசித்துப் பார்த்தவன் தேவனுக்காகத்தான் வாழ்வேன் என்று நினைத்து வாழ வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது. அப்படியானால் உங்களுக்காகவும், எனக்காகவும் உயிரைக் கொடுத்த அந்த இயேசு உங்கள் மேலும், என் மேலும் அன்புவைத்து நம்மை அழிக்காமல் தன்னையே பலியாக்கி மீட்டாரே அது என்ன அன்பு? அது எப்பேர்பட்ட அன்பு? இப்பேர்பட்ட அன்பை ருசிப்பார்த்தவன் பிழைத்திருக்கிற நான் இனி எனக்கென்று பிழைத்திராமல் இயேசுவுக்கென்று பிழைப்பேன் என்று வாழ்வான். அவன்தான் உண்மையானவன். அப்படியானால் இயேசுவுக்கென்று பிழைக்கிறவன் எப்படி இருப்பான்? என்று கடந்த மூன்று மாதங்களாகத் தியானித்தோம் 1. இயேசுவுக்காகப் பிழைக்கிறவன் பாவத்திற்கு மரித்து இயேசுவுக்காக வாழ்வான். 2. கலாத்தியர் 2:19 "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேன்". எப்படி? தேவனுக்கென்று பிழைக்க வேண்டும் என்றால் நியாயப்பிரமாணத்திற்கு மரிக்க வேண்டும். நியாயப்பிரமாணம் பழைய ஏற்பாட்டுக் காலத்திலே, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்காக மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது. அது நிழல். ஆனால் பொருள் இயேசு. பொருள் வந்த பிறகு நிழலுக்கு அங்கு வேலையில்லை, அப்படியானால் ஒருவனுக்கு இரண்டு மனைவி இருக்கக் கூடாது, ஒருத்திக்கு இரண்டு கணவன் இருக்கக் கூடாது, ஆனால் ஒருவன் மரித்துவிட்டால் வேறொருவனைத் திருமணம் செய்யலாம். அதேபோல் இயேசுவும் நியாயப்பிரமாணமும் ஒன்றாக இருக்கக்கூடாது. இருந்தால் அது ஆவிக்குரிய விபசாரமாகிவிடும். ஆகவே நியாயப்பிரமாணத்திற்கு மரித்து இயேசுவுக்காகப் பிழைக்க வேண்டும் என்று கடந்த மாதத்திலே நாம் தியானித்தோம்.



இந்த மாதம் இயேசுவுக்காய் பிழைப்பவன் எப்படி இருப்பான்? என்பதை வேதத்திலிருந்து மற்றொரு காரியத்தைத் தியானிக்கப்போகிறோம். கொலோசெயர் 2:20 "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல," இங்கு என்ன சொல்லுகிறது வேதம்.? நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால் இனிமேலும் உலக வழக்கத்தின்படி எப்படி வாழ்வீர்கள்? என்று சொல்லுகிறது வேதம். அப்படியானால் நாம் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்து விட்டோம். அப்படியானால் இயேசுவுக்காக வாழ்கிறவன் உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்துவிட வேண்டும். இயேசு உலகத்தின் வழிபாடுகளில் சிக்கவில்லை. அவர் உலகத்தில் இருந்தார் ஆனால் உலகத்தின் வழிபாடுகளில் இல்லை. இயேசுகிறிஸ்து உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து மீட்டெடுத்தார். நாம் பாவத்தை அறிக்கையிட்டோம்.

அவர் நம்மை இரட்சித்தார், நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கினார், பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றோம். வேதம் என்ன சொல்லுகிறது? 1 பேதுரு 1:18 "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்," உங்கள் முன்னோர்களால் நீங்கள் பாரம்பரியமாய் அநுசரித்துவந்த வீணான நடக்கை. முன்னோர்கள் பாரம்பரியமாய் அநேக காரியங்களை அநுசரித்து வந்தார்கள். அதெல்லாம் ஆண்டவருடைய பார்வையில் வீணான நடத்தை.



அந்த நடத்தையிலிருந்து வெள்ளியினாலும், பொன்னினாலும் நாம் மீட்கப்படவில்லை. நம்மை மீட்க அவர் என்ன செய்தாராம்? 1 பேதுரு 1:19 "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." பாரம்பரியத்திலிருந்து வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படவில்லை விலையேறப்பெற்ற ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்கள். அப்படியானால் எப்பொழுது பாவத்திலிருந்து மீட்கப்பட்டோமோ அப்பொழுதே பாரம்பரியத்திலிருந்தும் மீட்கப்பட்டாயிற்று. பாவத்திற்கு மரித்தது போலவே பாரம்பரியத்திற்கும் மரித்துவிட வேண்டும். பாரம்பரியம் யாருடையது? முன்னோர்களுடையது, அது முன்னோர்களால் வந்தது. அது எப்படிப்பட்டது? அது வீணான நடத்தை. இந்த பாரம்பரியத்தை நீங்களும் நானும் கைக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் இந்த உலகத்தில் நாம் பாவத்தில் வாழ்ந்தோம், இயேசு சொன்னார் நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். எங்கிருந்து நம்மைத் தெரிந்துகொண்டார்? உலகத்திலிருந்து தெரிந்து கொண்டார். நம்மை உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட அவர் நம்முடைய பாவங்களை மன்னித்தார். நாம் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்ததுபோல நாமும் ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டு அவரோடுகூட எழும்பினோம். வேதம் என்ன சொல்லுகிறது? எபேசியர் 2:7 "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்." யார் எழுப்பினது? பிதாவாகிய தேவன். இயேசுவை யார் எழுப்பினது? பிதாவாகிய தேவன். இயேசு மரித்தார் மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார், இப்பொழுது எப்படி இயேசு கிறிஸ்துவை பிதா எழுப்பினாரோ, அப்படியே நம்மையும் எழுப்பி, நம்மையும் ஞானஸ்நானத்திலே அடக்கம்பண்ணி நம்மை எழுப்பி இயேசுவோடுகூட உன்னதத்திலே உட்காரவைத்தார். நாம் எங்கே இருந்தோம்? உலகத்தில் இருந்தோம். உலகத்திலிருந்த நாம் பாவங்களுக்கு மரித்தோம். பாவமன்னிப்புப் பெற்றோம். ஞானஸ்நானம் பெற்றோம், ஞானஸ்நானத்திலே அடக்கம் பண்ணப்பட்டோம், அடக்கம் பண்ணப்பட்டு எழும்பினோம், அப்படி எழும்பும் போது பிதாவானவர் நம்மை கிறிஸ்துவுடனேக் கூட உன்னதத்திலே உட்காரவைத்தார். உன்னதத்தில் சென்றவுடன், உன்னதத்திலே இருக்கிற நமக்காக இயேசுகிறிஸ்து என்ன செய்கிறார்? யோவான் 17:14 "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது." பிதாவினிடத்தில் ஜெபிக்கிறார் பிதாவே உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தான் அல்லாதது போல இவர்களும் உலகத்தார் அல்ல. ஆனால் நம்மை முதலில் உலகத்திலிருந்துதான் மீட்டார். நாம் பாவத்திற்கு மரித்தோம், பாரம்பரியத்திற்கு மரித்தோம், எல்லாவற்றிற்கும் மரித்தோம், அடக்கம் பண்ணப்பட்டோம், உயிரோடு எழுந்தோம், பிதாவாகிய தேவன் என்ன செய்தார்? இயேசுகிறிஸ்துவோடே நம்மை உன்னதங்களில் உட்கார வைத்தார். ஆனால் அங்கே இருந்து நமக்காக இயேசுகிறிஸ்து பிதாவினுடைய வார்த்தையைக் கொடுக்கிறார், அந்த வார்த்தையைக் கொடுத்தவர் என்ன சொல்லுகிறார்? ஆண்டவரே உம்முடைய வார்த்தையைக் கொடுத்துவிட்டேன் இப்பொழுது நான் உலகத்தார் அல்லாதது போல இவர்களும் உலகத்தார் அல்ல. இப்பொழுது நாம் உலகத்தாரா? இல்லை. உன்னதத்திற்குரியவர்களா? ஆம் இப்பொழுது நாம் உன்னதத்திற்குரியவர்கள்.



இப்பொழுது உன்னதத்திற்குரிய நாம் வசனத்தைப் பெற்றதினால் நாம் யாராக மாறிவிட்டோம் என்று இயேசு சொல்லுகிறார்? யோவான் 10:35 "தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க," தேவனுடைய வசனங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் தேவர்கள் என்று சொல்லியிருக்க. தேவ வசனத்தைக் கொடுத்து நம்மை உன்னதங்களில் உட்கார வைத்ததினால் நாம் யார்? உன்னதத்திற்குரியவர்கள், தேவர்கள், வானத்திற்குரியவர்கள். இப்பொழுது வானத்திற்குரியவர்களாகிய நமக்கு அவர் என்ன செய்கிறார்? யோவான் 17:18 "நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்." இப்பொழுது இயேசுவோடு எழுப்பப்பட்டு, ஞானஸ்நானத்திலே அடக்கம்பண்ணப்பட்டு எழுப்பப்பட்ட நம்மை இயேசுவோடு உன்னதத்திலே உட்காரவைத்தார் பிதா. அங்கே இயேசு நமக்கு வசனங்களைத் தந்தார். இப்பொழுது நாம் தேவர்கள் ஸ்தானத்திற்கு வந்துவிட்டோம், நமக்கு வசனத்தைக் கொடுத்துவிட்டு, நான் உலகத்தான் அல்லாததுப் போல இவர்களும் உலகத்தார் அல்ல என்று சொல்கிறார்..



இப்பொழுது இயேசு சொல்லுகிறார், பிதாவே! நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுப் போல நானும் இவர்களை உலகத்திற்கு அனுப்புகிறேன் (யோவான் 17:18). அப்படியானால் இப்பொழுது நாம் எங்கிருந்து எங்கே வந்திருக்கிறோம்? உன்னதத்திலிருந்து உலகத்திற்கு வந்திருக்கிறோம். நாம் உலகத்திற்குரியவர்களா? உன்னதத்திற்குரியவர்களா? நாம் உன்னதத்திற்குரியவர்கள் உலகத்திற்குரியவர்கள் அல்ல. நாம் உலகத்தார் அல்ல. உன்னதத்திற்குரியவர்கள், ஆனால் உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். பிதாவாகிய தேவனிடத்தில் இயேசு சொல்லுகிறார் நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுப் போல என்று. உன்னதத்திலிருந்த இயேசுவை பிதாவாகிய தேவன் உலகத்தில் அனுப்பினார். இந்த உலகத்திற்கு வந்த இயேசு எப்படி உலகத்தில் வாழ்ந்தார்? வேதம் சொல்லுகிறது யோவான் 14:30 "இனி நான் உங்களுடனே அதிகமாய் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை." இந்த உலகத்தின் அதிபதி சாத்தான் வருகிறான். அவனுடைய காரியங்கள் என்னிடம் ஒன்றும் இல்லை. உலகத்தின் காரியம் என்னிடம் ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிட்டார். அருமையான சகோதரனே, சகோதரியே! நீங்களும் நானும் உன்னதத்திற்குரியவர்கள். அப்படியிருக்க உன்னதத்திலிருந்து உலகத்திற்கு அனுப்பினார். கர்த்தாவே நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுப் போல நானும் இவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் என்று சொல்லி அனுப்பினார். நாம் உன்னதத்திற்குரியவர்கள். உலகத்திற்குரியவர்கள் அல்ல. அப்படியென்றால் உலகம் போகிற வண்ணமாக நாம் போக முடியாது, உலகம் சாத்தானுக்குரியது. உலகத்திற்கு பிதாவினால் அனுப்பப்பட்ட இயேசு சொல்லுகிறார், இதோ உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. உலகம் சாத்தானுக்குரியது. அப்படியானால் உலகத்தின் சடங்காச்சாரியங்கள் அனைத்தும் சாத்தானுக்குரியது. அது தேவனுக்குரியது அல்ல. உன்னதத்திற்குரியது, சாத்தானுக்குரியது என்று எப்படி கண்டுப்பிடிக்கலாம்? வேதத்தில் இல்லாத உலகப்பிரகாரமான பாரம்பரியங்கள் அனைத்தும் சாத்தானுக்குரியது. வேதத்தில் உள்ள அனைத்தும் தேவனுக்குரியது அதைச் செய்துதான் ஆகவேண்டும். ஆனால் நீங்களும் நானும் இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டதுப் போல, அடக்கம்பண்ணப்பட்டோம். எதற்காக நாம் மரித்தோம்? உலக பாரம்பரியத்திற்கு நாம் மரித்து விட்டோம். நாம் மரித்த பிறகுதான் அடக்கம்பண்னப்பட்டோம். அப்படியானால் இந்த உலகத்திற்கு மரித்த நமக்குள் உலக பாரம்பரியம் இருக்கக் கூடாது. நாம் வானத்திற்குரியவர்கள். நமக்கு இந்த உலகப்பிரகாரமான பாரம்பரியம் இருக்கக் கூடாது. நமக்கும் அவனுக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை. உலகம் சாத்தானுக்குரியது. அதைத் தான் இயேசு சொன்னார். இதோ உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. அப்படியானால் நீங்களும் தேவனுக்கென்று பிழைக்க வேண்டும் என்றால் உலகத்தின் அதிபதியாகிய சாத்தானின் பாரம்பரியங்களின்படி நீங்களும் நானும் செயல்பட முடியாது. இந்த பாரம்பரியத்திற்கு நாம் மரித்துவிட வேண்டும். குழந்தைக்கு முதல் பிறந்தநாள் கொண்டாடுகிறார்களே எதனால்? ஆனால் புற மதத்தினர் என்ன செய்கிறார்கள்? குழந்தைக்குக் காது குத்தி, மொட்டை அடித்து முதல் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள்.



நாம் அதெல்லாம் செய்வது இல்லை ஆனால் முதல் பிறந்தநாள் மட்டும் நாம் கொண்டாடுவோம் ஏன்? பிள்ளைக்கு 10 வது பிறந்தநாள் கொண்டாடுவது இல்லை? பிறந்தநாள் கொண்டாடுவது பாரம்பரியம். ஒரு பெண் வளர்ந்து வருகிறாள் அவளுக்குப் பூ வைக்கிறார்கள் பூ வைக்கிறது வசனம் தானா இல்லை பாரம்பரியம். எப்படி என்று கேட்கிறீர்களா? அந்த பிள்ளைக்குத் திருமணம் ஆகிறது இரண்டு பிள்ளைகள் பிறக்கிறார்கள் கணவன் மரித்துவிடுகிறான் ஏன் பூவை எடுக்கச் சொல்லுகிறீர்கள்? அது தமிழ்நாட்டின் கலாச்சாரம். இதில் பொங்கல் கொண்டாடுகிறார்களாம், நாம் தமிழர்கள். நாம் உலகத்தார் அல்ல உன்னதத்திற்குரியவர்கள். உன்னதத்திற்குரியவர்கள் உலகத்திற்கு வந்திருக்கிறோம். தமிழ்நாட்டு பாரம்பரியம் நம்மிடம் வரக்கூடாது. வீடுக் கட்டினால் பால் காய்ப்பார்கள் ஏன்? மற்றவர்கள் அப்படிச் செய்வார்கள். அவர்கள் பசுமாட்டைத் தெய்வமாக நினைப்பதினால் பாலை காய்த்து, அதை பொங்கவிட்டு, அதைக் குடித்தால் அது ஆசீர்வாதம் என்று நினைக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் அதையும் தான் செய்கிறார்கள். அது பாரம்பரியம். திருமணத்திற்கு வாழைமரம் கட்டுகிறீர்களே அது ஏன்? திருமணம் செய்பவர்கள் வாழையடி வாழையாக மக்கள் செழிக்க வேண்டும் என்று அதைக் கட்டுகிறார்கள். ஆனால் அதில் எத்தனை பேருக்கு குழந்தையில்லை அது பாரம்பரியம். சரி திருமணத்தில் தாலி கட்டுகிறார்கள் ஏன் கட்டுகிறார்கள்? தமிழ்நாட்டின் வழக்கம். நாம் உலகத்திற்குரியவர்கள் அல்ல உன்னதத்திற்குரியவர்கள். தாலி கட்ட வேண்டாம் என்று சொல்கிறீர்களா? அப்படியானால் திருமணம் ஆகிவிட்டது என்று எப்படித் தெரியும்? சரி மனைவிக்குத் திருமணம் ஆனது என்று தெரிய வேண்டும் எனவே தாலி கட்டுகிறார்கள், கணவனுக்கு ஏன் தாலி கட்டவில்லை? ஆணுக்கு அடையாளம் தெரிய வேண்டாமா? சரி அடையாளம் என்றே வைத்துக்கொள்ளுங்கள், பிள்ளை பிறந்து விட்டது கணவன் மரித்துவிட்டான் ஏன் தாலியைக் கழட்டச் சொல்லுகிறீர்கள்? அதான் பிள்ளைகள் இருக்கிறதே, கர்ப்பவதி ஆகிறாள் அடுத்தது என்ன செய்ய வேண்டும் வளைகாப்பு, இதெல்லாம் மற்றவர்கள் செய்யும் பாரம்பரியம். இதெல்லாம் ஏன்? என்று அவர்களுக்கே தெரியாது. இதெல்லாம் 7 வகை சாப்பாடு, 5 வகை சாப்பாடு செய்து அந்த பெண்ணிற்கு கொடுப்பார்கள், அதாவது முதல் பிரசவம் தான் ஆபத்தானது. ஆண்டவரே சொல்லுவார் முதல் பிரசவத்தில் அலறுகிறவள் போல் அலறுகிறாயே என்று. அப்படியானால் முதல் பிரசவம் ஆபத்தானது. அதனால் பெண்ணை அலங்கரித்துப் பூ வைத்து, போட்டோ எடுத்து வைத்து, 7 வகை சாப்பாடு 9 வகை சாப்பாடு என்று சொல்லி கொடுப்பார்கள். ஏன்? ஒருவேளை மரித்து விட்டால் இருந்தெல்லாம் சாப்பிட்டுவிட்டு போகட்டும் இதெல்லாம் பாரம்பரியம். பெண் வயதிற்கு வந்துவிட்டால் அது இயற்கை. அதற்கு ஏன் சடங்கு என்று செய்கிறாய்? அது பாரம்பரியம். ஏன் தெரியுமா? என் மகள் வயதிற்கு வந்துவிட்டாள் டும்..டும்..டும்.. இப்பொழுது பெண் கேட்கிறவர்கள் எல்லாம் கேட்கலாம் டும்..டும்..டும்.. நீ வரும்போது சாப்பிட்டுவிட்டு காசு கொடுத்துவிட்டு போ டும்..டும்..டும்.. என்று உலகத்திற்கு அறிவிக்கிறார்கள். அவள் வயதிற்கு வந்ததே வெளியில் தெரியக்கூடாது, ஆனால் அவர்கள் அதைச் செய்கிறார்கள் என்று நீயும் அதைத் தான் செய்கிறாய். நீ எங்குள்ளவன்? நீ எங்குள்ளவள்? உன்னதத்திற்குரியவன் உலகத்திற்கு வந்திருக்கிறாய். உலகத்திற்கு வந்தாலும் உன்னதத்திற்குரியவனா? உலகத்திற்குரியவனா? உலகம் வேறுவிதத்தில் நடக்கும். ஆனால் உலகத்திற்கு ஏற்றது போல் நடந்தால் வேதம் என்ன சொல்லுகிறது தெரியுமா? ரோமர் 12:2 "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள், உன்னதத்திற்குரியவன் உலகத்தின் படி வாழ்ந்தால் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிப்பவன் என்று அர்த்தம். அப்படி இல்லை, நாம் எங்குள்ளவர்கள்? உன்னதத்திற்குரியவர்கள், உன்னதத்திலிருக்கிறவர்கள் உலகத்தில் வந்திருக்கிறோம், உலகத்தில் வந்திருக்கிற நாம் உலக பாரம்பரியத்தின்படி வாழ்ந்தால் வேதம் சொல்லுகிறது நீங்கள் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் போடுகிறீர்கள் என்று, சகோதரனே, சகோதரியே உன்னதத்திலிருந்து உலகத்திற்கு வந்த நீ, இன்னும் பாரம்பரியங்களைக் கைக்கொள்ளுகிறாயா? நீ பாரம்பரியத்திற்கு மரித்து விட வேண்டும். உன்னுடைய முற்பிதாக்கள் சொல்லுகிறார்கள், அவர்கள் சொல்லுகிறார்கள் இவர்கள் சொல்லுகிறார்கள் என்று பாரம்பரியத்தைச் செய்கிறாயா? உலகத்திற்கு ஒத்த வேஷம் போடுகிறாய். என் இயேசு சொல்லுகிறார், இதோ உலகத்தின் அதிபதி வருகிறான் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று, நீ உலகத்தின் ஜனங்களோடுச் சேர சேர அந்த காரியங்கள் உனக்குள்ளும் வரும், அது உலகத்தின் பாரம்பரியம், அதனால் தான் இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து பிலேயாம் சொல்லுவான் அவர்கள் உலகத்தின் ஜாதிகளோடு கலவாமல் தனியே வாசம்பண்ணுகிறவர்கள். அகாஸ்வேரு ராஜாவின் காலத்தில் ஆமான் சொல்லுவான், யூத ஜனங்களுக்கும், நம்முடைய ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டு, நம்முடைய ஜனங்கள் செய்கிறதை அவர்கள் செய்யாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாய் இருக்கிறது என்று சொல்லுவான் அது உண்மைதான் நாம் வானத்திற்குரியவர்கள் பூமிக்கு வந்திருக்கிறோம், இந்த பூமியில் இருக்கிறவர்கள் போல் நாமும் செய்தால் நீங்களும், நானும் யார்? வேஷம் போடுகிறவர்கள் என்று அர்த்தம்.



இயேசுவுக்காய் வாழ வேண்டும், இயேசு எனக்காய் ஜீவனைக் கொடுத்தார், பிழைக்கிற நான் அவருக்காகத்தான் பிழைக்க வேண்டும் என்று நினைத்து வாழ்கிறவன் உலகத்தின் பாரம்பரியத்திற்கு மரித்து விடுவான், என்ன சொல்லப் போகிறாய் நீ? இயேசுவுக்காக வாழப் போகிறாயா? இல்லை வேஷம் போடப் போகிறாயா? ஆகாப் யுத்தத்தில் வேஷம் போட்டான் அவன் கதை முடிந்தது, யெரொபெயாமின் மனைவி வேஷம் போட்டு அகாயா தீர்க்கதரிசியிடம் வந்தாள் பிள்ளை மரித்துப் போனது, சவுல் வேஷம் போட்டுக் குறி சொல்லுகிறவளிடம் வந்தான் அவன் கதை முடிந்து போனது. நீ வேஷம் போடுகிறாயா? உலகத்திற்கு ஏற்ற வேஷம் போடுகிறாயா? யோசித்துப் பார்? எங்கள் முற்பிதாக்கள் சொல்லுகிறார்கள், அவர்கள் சொல்லுகிறார்கள், இவர்கள் சொல்லுகிறார்கள் என்று செய்கிறாயா? என்ன நடக்கிறது என்று சொல்லுகிறேன் பாருங்கள் சங்கீதம் 106:34 "கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடி, அவர்கள் அந்த ஜனங்களை அழிக்கவில்லை." ஆண்டவர் சொல்லியிருந்தார் கானானுக்கு போகும்போது இந்த ஜனங்களை அழித்துவிடு என்று. ஆனால் அவர்களோ இருக்கட்டும் என்று சொல்லி விட்டுவிட்டார்கள். அழிக்கவில்லை ஆகையினாலே என்ன நடந்தது என்று பாருங்கள் சங்கீதம் 106:35 "ஜாதிகளுடனே கலந்து, அவர்கள் கிரியைகளைக் கற்று;" வேதம் சொல்லுகிறது அவர்களுக்கும் உங்களுக்கும் சம்மந்தம் வேண்டாம், அவர்களை அழித்துவிடுங்கள் என்று தேவன் சொன்னார், ஆனால் இவர்களோ அவர்களை அழிக்காமல் அவர்களோடு கலந்துவிட்டார்கள், கலந்தவர்கள் என்ன செய்தார்கள்? அவர்களுடைய கிரியைகளைக் கற்றுக்கொண்டார்கள், தேவ ஜனங்கள் செய்கிறதைக் கானானின் அந்நிய ஜனங்கள் செய்யவில்லை மாறாக அந்நிய ஜனங்கள் செய்கிறதை தேவ ஜனங்கள் செய்கிறார்கள். நல்லப் பழம் கெட்ட பழத்தை நல்ல பழமாக்காது, ஆனால் கெட்டப் பழம் நல்லப் பழத்தைக் கெடச் செய்துவிடும், உலகத்தான் பரிசுத்தவானைக் கெடுத்துவிடுவான், பாவம் செய்ய வைத்தோ, அல்லது பாரம்பரியத்தை செய்யவைத்தோ கெடுத்துவிடுவான், அதைத்தான் ஆண்டவர் சொல்லுகிறார் அவர்கள் ஜாதிகளுடனே கலந்து அவர்களுடைய கிரியைகளைக் கற்றுக்கொண்டார்கள், நீ உலகத்தின் மக்களோடு கூட கலந்துக்கொள்ளுவதினால் உன்னுடைய உறவினர்கள் பாரம்பரியத்தைச் செய்ய சொல்லுகிறார்கள், அவர்கள் சொல்லுகிறதைக் கட்டாயம் செய்ய சொல்லுகிறார்கள் அதனால் தான் அப்படி செய்கிறேன் என்று நீ சொன்னால், நீ வேஷம் போடுகிறாய் என்று அர்த்தம். அடுத்த வசனம் என்ன சொல்லுகிறது பாருங்கள் சங்கீதம் 106:39 "அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள்.." அவர்களை அழித்துவிடுங்கள் என்று தேவன் சொன்னார், அவர்களுடைய வாழ்க்கை வேறு, அவர்களுடன் சேராதீர்கள் அவர்களை அழித்து விடுங்கள் என்று, ஆனால் அவர்களை அழிக்காமல் அவர்களுடன் சேர்ந்தீர்களே! அவர்களுடைய கிரியைகளைக் கற்றுக் கொண்டீர்களே! என்ன ஆனது? அவர்கள் செய்த காரியங்களைச் செய்து அவர்களுடைய காரியங்களில் அசுத்தமாகி தேவனுக்கு துரோகம் செய்து சோரம் போய்விட்டார்கள். அருமையான தேவ ஜனமே! நீ இயேசுவுக்காய் பிழைக்க வேண்டும், வைராக்கியமாய் வாழ வேண்டும் என்று வாஞ்சிப்பாயானால் பாரம்பரியத்திற்கு மரித்துவிடு, கிறிஸ்துவுடனே கூட உலகப் பாரம்பரியத்திற்கு மரித்துவிடு, வேண்டாம் ஆண்டவரே! இதுவரைக்கும் நான் உலக பாரம்பரியத்தில் இருந்துவிட்டேன் எனக்குத் தெரியவில்லை, நான் வேஷம் போட்டுவிட்டேன், இன்றைக்கு ஒரு தீர்மானம் எடுக்கிறேன், வாழ்வது உமக்காக ஆண்டவரே! உமக்காக வாழ விரும்புகிறேன், என்னை ஒப்புக் கொடுக்கிறேன் ஆண்டவரே! இந்த பாரம்பரியம் எனக்கு வேண்டாம், உலகத்தின் அதிபதி என்னைப் பார்த்து, உலகத்தின் காரியம் என்னிடத்தில் இருக்கிறது என்று அறியக்கூடாது, என்னை ஒப்புக் கொடுக்கிறேன் ஆண்டவரே! நான் உலகத்தார்போல் வாழ்ந்தால், உலகத்தார் போலவும், தேவனுடைய பிள்ளையாகவும் வேஷம் போடுகிறேன் என்று அர்த்தம், ஆண்டவரே! உன்னதத்திலிருந்து மணவாளனாகிய இயேசு மனவாட்டியாகிய என்னை இந்த உலகத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார், அவர் வரும்வரை என்னுடைய வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள உதவிச் செய்யும் ஆண்டவரே என்று சொல். ஒருவேளை நீ பாரம்பரியத்தில் ஈடுபட்டு சாத்தானின் காரியங்களைக் கைக்கொண்டால் என்ன நடக்கும் என்று வேதம் சொல்லுகிறதைப் பாருங்கள் யாக்கோபு 4:4 "விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்". என்ன சொல்லுகிறார்? உலகத்திற்கு ஒத்த வேஷம் போட்டாலும், பாரம்பரியத்தைச் செய்தாலும் வேஷம் போடுகிறார்கள் என்று தான் அர்த்தம், இன்னும் யாக்கோபு சொல்லுகிறார், விபசாரரே, விபசாரிகளே என்று. நீங்களும் நானும் அவருக்கு மணவாட்டி இங்கு பிதாவாகிய தேவன் இயேசுவை அனுப்பினதுப் போல நம்மை அனுப்பியிருக்கிறார், ஆனால் இங்கு சாத்தானோடு கைகோர்த்து அவன் சொல்வது போல் பாரம்பரியத்தைக் கைக் கொண்டால், சாத்தானோடு நாம் இணைந்துவிட்டோம் என்று அர்த்தம், ஆவிக்குரிய வாழ்க்கையில் விபசாரர், விபசாரி. இதை யார் செய்வார்கள் தெரியுமா? அவர்மேல் அன்பு இல்லாதவர்கள், அவருக்காக வெறிப் பிடித்து அவர் எனக்காகப் பாடுபட்டு, இரத்தம் சிந்தினாரே, இவருக்காகத்தான் வாழப் போகிறேன் என்று சொல்லி நிதானிக்காதவன் எதை வேண்டுமானாலும் செய்வான். சகோதரனே, சகோதரியே, இதை வாசித்துக் கொண்டிருக்கிற நீ, பிழைக்கிற நீ உமக்காய் பிழைக்க என்னை ஒப்புக் கொடுக்கிறேன் ஆண்டவரே, உமக்காகத்தான் வாழ்வேன் ஆண்டவரே, என்னை ஒப்புக்கொடுக்கிறேன், ஆகவே கிறிஸ்து உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுப் போல நானும் இந்த உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்து இயேசுவுக்காய் வாழ விரும்புகிறேன், என்னை ஒப்புக்கொடுக்கிறேன் ஆண்டவரே என்று ஆண்டவரிடம் சொல்வாயா? கர்த்தர் தாமே உன்னதத்தின் பெலத்தினால் உன்னை இடைக் கட்டுவாராக!! மாரநாதா!!

கர்த்தரின் வேலைக்காரன்
P.அற்புதராஜ் சாமுவேல்

# என்னில் நிலைத்திருங்கள்



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

“என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்” (யோவான் 15:4).

அன்பு சகோதரிகளே, இயேசு சொல்லுகிறார்: என்னில் நிலைத்திருங்கள் என்று. அப்படியென்றால், அவரில் சார்ந்திருக்க வேண்டும். ஒரு செடி, பல கிளைகளாக, கொடிகளாக பரவுகின்றது. அது கீழே வேர் பற்றி மேலே கனிக் கொடுக்கிறது. அது நிலத்திலிருந்து தண்ணீரை உறிஞ்சி கிளைகளுக்கு அனுப்பும்போது அது பலனைக் கொடுக்கிறது. அதுபோல நாம் ஆண்டவரோடு இணைந்திருக்கும்போது, அவருடைய வார்த்தைகளை நாம் இருதயத்தில் பதித்துவைத்து அவைகளின்படி வாழும்போது, இயேசு நமக்குத் தந்த கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கும்போது, இயேசு நம்மோடு இருந்து நாம் வேண்டிக்கொள்வதை அருள் செய்கிறார். நம் கையின் கிரியைகளை ஆசீர்வதிக்கிறார்.

“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” (யோவான் 15:7,8).

“நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்” (யோவான் 15:1-3).

ஒரு எஜமான் கனிக்கொடுக்கிற செடியை கிளை நறுக்கி, களைப் பிடுங்கி, தண்ணீர் ஊற்றி, பாதுகாத்து வளர்ப்பதுபோல தேவனுக்காக கிரியை செய்கிற மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிற நம்மை கிளை நறுக்கி, களை பிடுங்குவதுபோல சுத்தம் செய்கிறார்.



“நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு” (வெளி. 3:19). நாம் தேவனை விட்டு விலகும்போது அல்லது அவரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், நம் சுய புத்தியில் சாயும்போது தேவன் நம்மை சிட்சித்துப் பரிசுத்தப்படுத்துகிறார்.

“என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்” (நீதி. 3:11,12).

மேலே சொல்லப்பட்டுள்ள வசனத்தின்படி தேவன் யாரை நேசிக்கிறாரோ, அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறார். அவர் தமது பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்மை சிட்சிக்கிறார். தேவனால் சிட்சிக்கப்படும்போது நாம் நம் குறைகளை, கீழ்ப்படியாமைகளை உணர்ந்து, அறிக்கைசெய்து விட்டு விட்டு தேவனிடம் மன்னிப்புக்கேட்கும்போது தேவன் நம்மை மன்னித்து, மீண்டும் நம்மைத் தம்முடன் சேர்த்துக்கொள்கிறார். தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ?

“என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்”.

“ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்” (யோவான் 15:4,6).

இயேசு உலகத்திலிருந்த நாட்களில் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருந்ததுபோல, நாமும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டால் அவரில் நிலைத்திருப்போம். “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது” (யோவான் 15:12) என்று இயேசு சொல்லுகிறார்.

“முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்” (மத். 24:13).

“இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்” (1 யோவான் 2:28).

அன்பு சகோதரிகளே, இயேசு பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பில் நிலைத்திருந்ததுபோல, நாமும் தேவனுடைய கற்பனைகளை எல்லாம் கைக்கொண்டு, அவரின் அன்பில் நிலைத்திருப்போம். கர்த்தர் நம்மில் மகிமைப்படும்படியான வாழ்க்கை வாழ ஒருவரிலொருவர் அன்பாயிருந்து, அவரில் நிலைத்திருந்து அவருடைய வருகைக்கு ஆயத்தமாவோம். கர்த்தர் கிருபைத் தருவாராக!!

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரி,
எப்சிபா அற்புதராஜ்.

வாலிபர் பகுதி

# ஆவிக்குரிய உணர்வு – பாகம் – 8



கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைப்படுவதாக. எங்களுக்கு மிகவும் அருமையான அன்பு வாலிபரே, ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் வாழ்த்துகிறோம். நாம் "ஆவிக்குரிய உணர்வு" என்ற தலைப்பில் தியானித்து வருகிறோம். இந்த இதழில் 'சத்தத்தின் நோக்கத்தையும் தாக்கத்தையும்' உணரும் உணர்வை குறித்துப் பார்க்கலாம். இது மிகவும் முக்கியமானது. Sense the Intention & Impact of the sounds.

பிரியமான அன்பு வாலிபரே, நம் கண்களினால் பார்க்கிற ஒரு காரியத்தைவிட, நம் செவிகளினால் கேட்கிற காரியத்தின்மீது மிக அதிக கவனம் நமக்கு தேவை. கவனியுங்கள், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் ஏதேன் தோட்டத்தின் நடுவில் இருந்தது. அதை நிச்சயம் ஆதாமும் ஏவாளும் பல முறை பார்த்திருக்கக் கூடும். ஆனால் அவர்கள் அதின் கனியைப் பறித்து புசிக்கவில்லை. ஆனால், சாத்தான் அதைக் குறித்து "ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது". பேசும்போது, அவள் அந்த 'சத்தத்தின் நோக்கத்தையும் தாக்கத்தையும்' உணராமல், அந்த சத்தத்தை உள்வாங்கினபடியால் அந்த கனியையும், அந்த விருட்சத்தையும் பார்த்த விதம் வேறுபட்டது, அவள் புசிக்கக் கூடாத அதின் கனியைப் பறித்து, புசித்தாள்.

அதேபோல், கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்துவந்த பன்னிரெண்டுபேரும், தாங்கள் பார்த்ததை அப்படியே எல்லாருக்கும் சொன்னார்கள். ஆனால் பத்துபேர் அதைக்குறித்து வேறுவிதமாய் சொன்னதினால், அநேகர் வழிவிலகிப்போனார்கள். கண்ட காட்சி ஒன்றுதான், ஆனால் பத்துபேர் பேசினதோ வித்தியாசம், கேட்டவர்கள் அந்த சத்தத்தின் மறைவான 'நோக்கத்தையும் தாக்கத்தையும்' உணராமல் கேட்டப்படியால் வழிவிலகிப்போனார்கள்.

வேதம் சொல்லுகிறது: "அவர்கள் ஞானமடைந்து, இதை உணர்ந்து, தங்கள் முடிவைச் சிந்தித்துக்கொண்டால் நலமாயிருக்கும் என்றார்" (உபாகமம் 32:29). இதில் தேவன் பேசுகிற நோக்கத்தையும் தாக்கத்தையும் உணர்ந்தால், அது நலமாயிருக்கும் என்று பார்க்கிறோம்.

"இச்சகமான வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கும் தப்புவிக்கப்படுவாய். அவளுடைய வீடு மரணத்துக்கும், அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்கும் சாய்கிறது" (நீதி. 2:17,18). இதில் பேசுகிற பேச்சின் நோக்கத்தையும் தாக்கத்தையும் உணர்ந்தால் தப்பிக்கலாம், இல்லையெனில் நரகமே..

ஆண்டவராகிய இயேசு தன்னுடைய மரணத்தைக்குறித்து பேசும்போது, பேதுரு அவரைத் தனியே அழைத்து சில காரியத்தைப் பேசினான். ஆனால் இயேசுவோ, அதின் நோக்கத்தையும் தாக்கத்தையும் அறிந்தபடியால், அந்த வார்த்தைக்கு இடம் கொடுக்கவில்லை.

இதை வாசிக்கிற அன்பு வாலிபரே, நாம் ஒவ்வொரு நாளும் அநேக சத்தத்தைக் கேட்கிறோம். ஆனால் அதின் நோக்கத்தையும் தாக்கத்தையும் நாம் அறியாதபடியினால், பல குழப்பங்களுக்கு, கவலைகளுக்கு, பாவங்களுக்கு, அவிசுவாசத்திற்கு இடங்கொடுத்து வழிவிலகுகிறோம். ஒருவர் நம்மிடத்தில் தெருக்களில் காணப்படுகிற மின்சார கம்பிகளை, எத்தனை நயங்காட்டி தொடச் சொன்னாலும், நாம் அதைத் தொடமாட்டோம், காரணம் அந்த சத்தத்தின் நோக்கத்தையும் தாக்கத்தையும் நாம் அறிந்திருக்கிறோம்.



தேவனுடைய சத்தம் பரிசுத்தமும் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிறதுமாயிருக்கிறது. சாத்தானின் சத்தமோ பாவமும் பாதாளத்துக்குக் கொண்டு செல்லுகிறதுமாயிருக்கிறது. இயேசு தேவ சத்தத்திற்கு மட்டுமே செவிகொடுத்தார். அப்படியென்றால் சத்தத்தின் நோக்கத்தையும் தாக்கத்தையும் உணர, என்ன செய்ய வேண்டும்?. பின்வருவதை வாசிக்கலாம்.

1. தேவனுக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிவேன் என்று ஒப்புக்கொடுங்கள்.
2. தேவ கிருபையைச் சார்ந்து, அவரை நோக்கி கெஞ்சி ஜெபித்துக்கொண்டிரு.
3. வேதத்தை அதிகமாய் தியானித்துக்கொண்டிரு.
4. பரிசுத்த ஆவியின் நிறைவை வாஞ்சித்து, அதில் வளர்ந்துகொண்டேயிரு.
5. அதிகமானவரின் சத்தத்தைக் கேளாமல், குறிப்பிட்ட சத்தத்திற்கே செவிகொடுங்கள்.

மேலே குறிப்பிட்டபடி செய்து காத்திருங்கள், நிச்சயம் சத்தத்தின் நோக்கத்தையும் தாக்கத்தையும் உணரும் உணர்வை அடைவீர்கள். கர்த்தர் தாமே கிருபை செய்வாராக. ஆமென்!!

சிறுவர் பகுதி

# பானையில் சாவு



ஹாய் குட்டிஸ், இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். நீங்க எல்லாரும் நல்லா இருக்கீங்களா? எல்லாரும் சுகமா இருப்பீங்கனு கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

கடந்த மாதம் எலிசா தீர்க்கதரிசியைப் பற்றி என்ன படித்தோம் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? சூனேமியாளைப் பற்றி படித்தோம் அல்லவா? இந்த மாதம் மற்றொரு சம்பவத்தைப்பற்றி படிக்கலாமா?

எலிசா கில்காலுக்குத் திரும்பிப் போய் இருக்கையில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; தீர்க்கதரிசிகளின் புத்திரர், அவனுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள்; அவன் தன் வேலைக்காரனை நோக்கி: நீ பெரிய பானையை அடுப்பிலே வைத்துத் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் கூழ்காய்ச்சு என்றான்.

ஒருவன் கீரைகளைப் பறிக்க வெளியிலே போய், ஒரு பேய்க்கொம்மட்டிக் கொடியைக் கண்டு, அதன் காய்களை மடி நிறைய அறுத்துவந்து, அவைகளை அரிந்து கூழ்ப்பானையிலே போட்டான்; அது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதிருந்தது.

சாப்பிட அதை ஜனங்களுக்கு வார்த்தார்கள்; அவர்கள் அந்தக் கூழில் எடுத்துச் சாப்பிடுகிறபோது, அதைச் சாப்பிடக் கூடாமல்: தேவனுடைய மனுஷனே, பானையில் சாவு இருக்கிறது என்று சத்தமிட்டார்கள்.

அப்பொழுது அவன், மாவைக் கொண்டுவரச்சொல்லி, அதைப் பானையிலே போட்டு, ஜனங்கள் சாப்பிடும்படி அவர்களுக்கு வார் என்றான்; அப்புறம் பானையிலே தோஷம் இல்லாமற் போயிற்று.

பின்பு பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனான வாற்கோதுமையின் இருபது அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன்: ஜனங்களுக்குச் சாப்பிடக்கொடு என்றான். அதற்கு அவனுடைய பணிவிடைக்காரன்: இதை நான் நூறுபேருக்கு முன் வைப்பது எப்படி என்றான். அதற்கு அவன்: அதை ஜனங்களுக்குச் சாப்பிடக் கொடு; சாப்பிட்ட பிற்பாடு இன்னும் மீதியுண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

அப்பொழுது அவர்களுக்கு முன்பாக அதை வைத்தான்; கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது.

என்ன பிள்ளைகளா? பானையில் சாவு இருந்தது ஆனால் அது அவர்களை சேதப்படுத்தாதபடி தேவன் அவர்களைப் பாதுகாத்தார் இல்லையா? அதேபோல் நம்மையும் எந்த ஒரு காரியமும் சேதப்படுத்த முடியாது. நம்மை அழிக்க நினைக்கிற எந்த காரியமாக இருந்தாலும் தேவன் நம்மோடு இருந்தால் நம்மை எதுவும் செய்ய முடியாது. எங்கேயாவது போகும்போதும், வரும்போதும் எந்த காரியத்தை செய்வதற்கு முன்பும் ஜெபித்து விட்டு செயல்படும்போது தேவன் நம்மை பாதுகாப்பார்.



இதை உங்களுடைய தினசரி வாழ்க்கையில் செயல்படுத்துவீங்களா?

மீண்டும் அடுத்த மாதம் சந்திக்கிறேன்

ஜெபம்: அன்புள்ள பிதாவே, ஒவ்வொரு நாளும் நீர் எங்களோடு இருந்து எந்த தீமையும் எங்களைச் சேதப்படுத்தாதபடி காத்துக்கொள்ளும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறேன் பிதாவே ஆமென்.

*மனன வசனம்:* “இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது” (லூக்கா 10:19).

# கர்த்தருக்குக் காத்திருக்கும் ஊழியனாயிரு



கிறிஸ்துவுக்குள் அன்பு ஊழியரே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்கள். இயேசு கிறிஸ்து ஒருவிசைப் பூமிக்கு வந்தார் பாவிகளை இரட்சிக்க. 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' (மாற்கு 16:16) என்றார். அப்படியானால் இயேசு கிறிஸ்துவைத் தேவகுமாரன் என்றும் இந்த உலகுக்குப் பாவிகளை இரட்சிக்க வந்தார் என்றும் அவர் எனக்காக அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு இரத்தம் சிந்தி மரித்தார் என்றும், மூன்றாம் நாளில் உயிர்த்தார் என்றும், என் பாவங்களை எல்லாம் மனஸ்தாபப்பட்டு அறிக்கையிட்டு மன்னிப்புக்கேட்டபோது, என் பாவங்களை எல்லாம் மன்னித்தார் என்று விசுவாசித்து, அவரை உள்ளத்தில் வாரும் என ஏற்றுக்கொண்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். 'இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்' (அப். 2:47) என்ற வசனப்படி இரட்சிப்பின் (விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்) அநுபவத்தை உடையவர்களைச் சபையிலே கர்த்தர் சேர்க்கிறார். அப்படியானால் சபை என்பது இரட்சிக்கப்படுவோரின் கூடுகையே. அருமை ஊழியனே, 'அவருடைய சரீரமாகிய சபையை உன்னை நம்பி உன்னிடம் கொடுத்துள்ளார்.

'உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப். 20:28) என்று வேதம் கூறுகிறது. உன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட சபையை, 'கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் (சபையை) தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே. 5:27) என்ற வசனப்படி அவரது வருகையிலே அவருக்குமுன் இந்த அனுபவத்தோடு நிறுத்த ஊழியனாகிய நீ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்த வசனப்படி இயேசு மறுபடியும் வருவார் என்பதை அறிந்திருக்கிறோம். '....தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்' (எபி. 9:28) என்று வேதம் கூறுகிறது.



இயேசுகிறிஸ்துவின் வருகையில் அவரைச் சந்திக்கும்படி காத்திருக்கும் சபையாக ஆயத்தப்படுத்த வேண்டியது, சபையை நடத்தும் ஒவ்வொரு ஊழியனுடைய கடமையாக உள்ளது. ஒரு ஊழியன், சபையைக் கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்கிற சபையாக நடத்துவானானால் ஊழியனும் மந்தைக்கு மாதிரியாயிருந்து, கிறிஸ்துவின் வருகையிலே நிச்சயமாக அவரைச் சந்திக்கக் காத்திருக்கிறவனாக இருக்க வேண்டும். சபை நடத்தும் ஒரு ஊழியன் எப்படியோ அப்படியேத் தான் சபையும் இருக்கும். சபையைக் கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்க ஆயத்தப்படுத்தும் எந்த ஊழியனும் நிச்சயமாய் அவருடைய வருகைக்குக் காத்திருப்பவனாகவே இருப்பான். பத்மு தீவிலே இருந்த இயேசுவுக்கு அன்பான சீஷனாகிய யோவானிடம் கண்டவைகளையும் இருக்கிறவைகளையும் இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் வெளிப்படுத்தினார் இயேசு. அவர் அவைகளை வெளிப்படுத்தி முடிக்கிறபோது 'இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார் (வெளி. 22:20). இயேசு இப்படி சொன்ன உடனே 'ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்' (வெளி. 22:20) என கூறுகிறான். இயேசு சொன்னவுடனே, அவன் உடனே அப்படிச் சொல்ல காரணம் என்ன? இயேசுவிடம் உடனே அப்படிச் சொல்வானானால், எந்த நேரம் இயேசு வந்தாலும் அவன் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருந்திருக்கிறான் என்பதே அதன் அர்த்தம். அப்படி இயேசுவைச் சந்திக்க ஆயத்தமாய் காத்திருந்தவன் வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது என்பதை ஆவியானவர் சொல்லுகிறதைப் பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷத்தின் தலைப்பிலே 'திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்று ஆவியானவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆங்கில வேதாகமத்திலே 'The revelation of st.John the divine' என்று வெளிப்படுத்தின விசேஷத்திற்கு தலைப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் 'தெய்வீக சுபாவமுடைய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்று ஆவியானவர் குறிப்பிடுகிறார்.

'அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள், அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (பிலி. 3:18,19) என்று பவுல் கூறுகிறார். அருமை ஊழியனே, இன்றைய ஆவிக்குரிய உலகமும் இந்த நிலையில்தான் உள்ளது. ஆவிக்குரிய சபைகளை நடத்துகிறேன் என்று மார்தட்டி கொள்ளும் ஊழியர்களும் இயேசுவின் வருகைக்கு எதிர்பாராது, உலக ஆசீர்வாதங்களையே நாடுகிறவர்களாக இருக்கின்றனர். அதோடுமாத்திரமல்ல, தாங்கள் நடத்தும் சபையாருக்கும் உலக ஆசீர்வாதங்களை பெறும்படியானவைகளையே உபதேசிக்கிறார்களே தவிர இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருக்கும் சபையாக நடத்துவதும் இல்லை. ஒருவேளை இதை வாசிக்கும் ஊழியனே உன் நிலைமையும் இப்படியிருந்தால் உன் முடிவும் சபையாரின் முடிவும் அழிவு (நரகம்) என்பதையும் தேவன் இயேசு அல்ல வயிறு என்பதையும், மகிமை இலச்சையே என்பதையும், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்பதையும் மறந்து விடாதே.

அநேகரின் நிலைமையைப்பற்றி கூறுகிற பவுல் 'நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் (காத்திருக்கிறோம்). அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்' (பிலி. 3:20,21) என்று கூறுகிறார். இப்படி கூறும் ஊழியனாகிய பவுல் 'நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்' (1 கொரி. 11:1) என்று சொல்லும் அளவிற்கு வாழ்கிறவராயிருக்கிறார். 'கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்கிறோம்' என்று உதட்டளவில் கூறாமல் நீயும் நானும் அவர் வருகைக்குக் காத்திருக்கிறவர்களாய் வாழ்ந்து காட்டுவோம். இயேசு கிறிஸ்து எந்த நாளில் வந்தாலும் அவரைச் சந்தித்து மகிமையடைவோம்.

'……நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது (இரட்சிப்பு)நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது' (ரோமர் 13:11) என வேதம் கூறுகிறது. பவுல் காலத்திலே இயேசுவின் இரட்சிப்பு சமீபம் என்கிறார். அருமை ஊழியனே, நீயும் நானும் இரட்சிக்கப்பட்ட காலத்திலே, இயேசு, தமக்காகக் காத்திருப்போருக்கு இரட்சிப்பை அருளும்படி மறுபடியும் வரப்போகிறார் என விசுவாசித்தோம். அப்படியிருக்க நாம் இரட்சிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆயிற்று. அப்படியானால் வரப்போகிற இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பு இன்னும் சமீபமாயிற்று என்பதை மறந்து விடாதே.

இயேசு கிறிஸ்து வருகிறதற்கு முன் சொல்லப்பட்ட சகல அடையாளங்களும் நடைபெறுகிறது. இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிப்பதால், நீங்கள் நிமிர்ந்துப் பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார் (லூக்கா 21:28). இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன் எவைகள் நடக்கும் என்று கூறினாரோ, அவைகள் நடந்து கொண்டிருக்கிறது. அப்படியே இவைகளெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள் (மத். 24:31) என்று இயேசு கிறிஸ்து கூறினார்.


ஆகவே இயேசு கிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமென்று அறிந்த நாம் 'வானம் எப்பொழுது திறக்கப்படுமோ, இயேசு எப்பொழுது வருவாரோ' என்று ஏக்கத்தோடு அவருடைய வருகைக்காகக் காத்திருப்போம். இயேசு கிறிஸ்து வாசலருகே வந்துவிட்டதை அறிந்திருக்கிறோம். நாம் அவரது வருகைக்குக் காத்திருப்போராக வாழ்ந்தால் மட்டுமே சபையாரையும் அவரது வருகைக்கு காத்திருக்கும்படி ஆயத்தப்படுத்தமுடியும். ஆகவே அவரது வருகைக்கு நாம் எப்படி காத்திருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கூறுவதைத் தியானிப்போம்.

நீதிமொழிகள் எட்டாவது அதிகாரம் ஞானமாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி கூறுகிறது. அப்படிப்பட்ட ஞானமாகிய இயேசு 'என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்கு செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்' (நீதி. 8:34) என்று கூறுகிறார். வாசலருகே வந்துவிட்ட அவரது வருகைக்கு காத்திருக்க வேண்டுமானால், 1.வாசற்படியில் நித்தம் விழித்திருக்க வேண்டும், 2.கதவு நிலையருகே காத்திருந்து செவிகொடுக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

1. நித்தம் விழித்திருக்க வேண்டும்

'ஆகையால் இனி சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்' (லூக்கா 21:36) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார். அப்படியானால் அவருடைய வருகைக்காக காத்திருக்கிறவர்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறவர்களாயிருந்து விழிப்புடன் (ஜாக்கிரதையுடன்) இருக்க வேண்டும் என இயேசு கிறிஸ்து கூறுகிறார். 'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்' (1 பேதுரு 4:7) என்று இயேசு கிறிஸ்துவோடு இருந்த அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறான். ஏன் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபிக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்? மனகுழப்பத்தோடு கவலையோடிருந்தால் ஜெபிக்க முடியாது. இயேசு கெத்செமனே தோட்டத்தில் 'என்னோடே கூட விழித்திருங்கள்' (மத். 26:38) என்று பேதுரு, யோவான், யாக்கோபு எனும் சீஷர்களிடம் கூறினார். 'அவர்கள் துக்கத்தினால் நித்திரைப்பண்ணுகிறதைக் கண்டு' (லூக்கா 22:45) என்று வேதம் கூறுகிறது. யாருடைய வாழ்வில் கவலை உண்டோ அவர்களால் ஜெபிக்க முடியாது. ஜெபிக்கக் கூடாதபடி தூக்கம்தான் வரும். பேதுரு சிறைச்சாலையில் காவல்பண்ணப்பட்டிருந்தபோது அங்கேயும் அவன் நித்திரைப் பண்ணினான் என்றுதான் வேதம் கூறுகிறது.

ஆகவேதான் இதைச் சரியாய் அறிந்த பேதுரு, தேவ ஜனங்களுக்கு, 'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோவென்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்' (1 பேதுரு 5:7,8) என்று எழுதுகிறார். வாசற்படியில் இயேசுவுக்காகக் காத்திருப்பவன் அதிகம் ஜெபத்தில் விழித்திருப்பவனாக இருக்க வேண்டும். அதிக நேரம் ஜெபத்திலே நீ விழித்திராவிட்டால் சத்துருவாகிய சாத்தான் உன்னைக் கவலை கொள்ளச் செய்வான். கவலைக் கொண்டவனாய் மாறுகையில் மெள்ள மெள்ள பாவம் செய்கிறவனாய் மாறுவாய். நீ உன் ஜெப வாழ்க்கையைச் சீர்தூக்கிப்பார். 'என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்' (நீதி. 8:17) என்று ஞானமாகிய இயேசு கூறுகிறார்.



உன் ஜெப வாழ்வு எந்த நிலையில் உள்ளது? நீ அதிகாலையில் எழுந்து தேவனைத் தேடுகிறவனா? அதிகமாக ஜெபிப்பவனா? அப்படிப்பட்ட ஊழியனாயிருந்தால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய பயப்பட்டு பரிசுத்தமாய் வாழுவாய். அதோடுமாத்திரமல்ல, எத்தனை விதமான கவலைகளை (அதாவது குடும்பத்தார் மூலம் உண்டாகும் கவலைகளை, உன் அயலகத்தார் மூலம் உண்டாகும் கவலைகளை) சத்துருவாகிய பிசாசு கொண்டுவருவானானால் நீ மிகவும் எளிதாய் ஜெயித்து, இன்னும் அதிகமாய் தேவனோடு நெருங்கி ஜீவிப்பவனாயிருப்பாய். உன் ஆவிக்குரிய வாழ்வில் ஜெபம் அதிகமாக இல்லாவிட்டால் உன் பரிசுத்த வாழ்வு கேள்விக்குறியே. சாத்தான் கொடுக்கும் கவலைகளால் உன்னால் அதிகம் ஊழியம் செய்ய மாட்டாய். தேவனுக்குப் பிரியமான பரிசுத்த வாழ்வில் நீ நிச்சயம் குறைவுள்ளவனாகவே இருப்பாய். இயேசு வாசலருகே வந்துவிட்டார். ஆகவே அவர் வாசற்படியில் நித்தம் ஜெபத்திலே விழிப்புள்ளவனாய் காத்திரு.

'என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்' (நீதி. 8:34) என்று ஞானமாகிய இயேசு கூறுகிறார்.

<u>2. காத்திருந்து செவிகொடுக்க வேண்டும்</u>

இயேசு கிறிஸ்து வாசலருகே வந்துவிட்டார் என எண்ணும் எந்த ஊழியனும் அவர் கூறும் எந்த வசனத்துக்கும் செவிகொடுத்து உடனே கீழ்ப்படிவான். 'சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்' (ஏசாயா 66:2) என்று கர்த்தர் சொல்லுகிறார். இன்றைய ஆவிக்குரிய உலகில் ஊழியர்கள் வசனங்களைச் சபைக்குப் போதிப்பதற்காகவே வேதம் வாசிக்கின்றனர்.

தன்னுடைய வாழ்வு தேவனது பார்வையில் நிறைவுள்ளதாக இருக்கும்படி, தான் வசனப்படி வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் தியானித்து, தேவ வசனத்துக்கு நடுங்கி உடனே கீழ்ப்படிவதில்லை. ஆகவேதான் இன்று அநேக ஊழியர் ஆசீர்வாதமான வார்த்தைகளை மாத்திரம் சபைக்குப் போதிப்போராய் மாறிப்போயினர். இயேசு கிறிஸ்துவின் வருகையிலே தாங்களும் காணப்படாது, தங்களிடம் கொடுக்கப்பட்ட விலைமதிக்க முடியாத ஆத்துமாக்களையும் கிறிஸ்துவின் வருகையில் நிறுத்தாது, ஏதோ சபையை நடத்தித் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் ஆசீர்வாதமாக வாழ்வதையே ஊழியம் என எண்ணி ஊழியம் செய்கிற ஊழியராய் அநேகர் மாறிப்போயினர்.

ஊழியனே, உன் நிலைமை என்ன? கர்த்தருடைய வசனத்துக்குச் செவிகொடுத்து, பின்னர் சபைக்கு வசனம் போதிக்கிறாயா? அல்லது சபையாரைப் பார்த்து 'நீ என்னைப் பார்க்காதே, நான் சொல்லும் வசனத்தை மட்டும் கேள்' என்று போதிக்கிறாயா? அப்படி நீ போதிப்பாயானால், நீ மந்தையை இறுமாப்பாய் ஆளும் ஊழியனாகவும், அவலட்சமான ஆதாயத்திற்காக கட்டாயமாய் சபையை மேய்க்கும் மேய்ப்பனாயிருப்பாயே. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17) என்று தமது சீஷர்களுக்காக பிதாவிடம் விண்ணப்பம்பண்ணுகிறார். அப்படியானால் ஊழியராகிய நாம் வேதத்தைத் தியானித்து, உடனே அந்த வசனங்களுக்கு நாம் அர்ப்பணித்து செயல்படுபவனாய் இருக்க வேண்டும். நாம் அவரது வார்த்தைகளைத் தியானித்து அர்ப்பணிக்க அர்ப்பணிக்க, நமது ஜென்மசுபாவங்கள் மறைந்து தெய்வீக சுபாவம் உண்டாகும். 'இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' (2 பேதுரு 1:4) என்று வேதம் கூறுகிறது. ஆகவே அந்த வசனங்கள் வேதத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நமக்கு அவைகளை வெளிப்படுத்தினவுடனே நாம், 'இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது (லூக்கா 1:38) என்று, சூழ்நிலை மாறான சமயத்திலும் உடனே ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தாள். 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்' என்று சொன்னமாத்திரத்திலே, "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று சொல்லும் அளவிற்கு யோவான் திவ்ய வாசகனாக மாறியதன் காரணம், இயேசு என்ன சொன்னாலும் உடனே கீழ்ப்படிகிறவனாகவே இருந்தான். உதாரணமாக, இயேசு சிலுவையில் தொங்குகையில் சிலுவையினருகே அவருடைய தாயும்... நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி, அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்த சீஷன் (யோவான்) அவளை தன்னிடமே ஏற்றுகொண்டான்" (யோவான் 19:25-27) என்று வேதம் கூறுகிறது.



யோவானுக்குப் பெற்றோர் உண்டு, குடும்பம் உண்டு. இயேசு சொன்னபோது, 'குடும்பத்தாரைக் கேட்டுச் செய்கிறேன்' என்று கூறவில்லை. சொன்னவர் இயேசு என்பதால், யாரைப்பற்றியும் யோசிக்காமல் உடனே அவரது சொல்லுக்கு கீழ்ப்படிந்தான். ஒரு ஊழியன் தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படியாமைக்கு காரணம் மூன்று.
1.தேவனை விட தம்மை நேசிப்பதால் (யோவான் 6:60).
2.தேவனை விட மற்றோரை நேசிப்பதால் (1 இராஜா. 11:6-8).
3.தேவனை விட மற்றோருக்குப் பயப்படுவதால் (1 சாமு. 15:24).
கர்த்தருக்குக் காத்திருக்கிற நீ, தேவன் சொன்ன வசனங்களுக்கு உடனே கீழ்ப்படியும்போது ஒருவேளை ஆவியில் வளராத குடும்பத்தாரோ, உறவினரோ உங்களைப் பகைக்கலாம், உன்னை குடும்பத்தை விட்டு, உறவை விட்டு விலக்கலாம். ஆனாலும் சோர்ந்துபோகாதே.

'கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்' (ஏசாயா 66:4) என்ற வசனப்படி, அவரது நிலையருகே காத்திருந்து, வசனங்களுக்கு நடுங்குகிற உனக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி உனக்கு காணப்படுவார், நீ மகிமையடையலாம். தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களை இரட்சிக்கும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் என்ற வசனப்படி வாசலருகே வந்துவிட்ட இயேசு, என்றைக்கு வந்தாலும் அவரைச்சந்திப்பதற்காக எப்படிக் காத்திருக்க வேண்டும் என்பதை ஒரு உதாரணம் மூலம் கூறுகிறார். அது என்ன? “உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷனுக்கு ஒப்பாகவும் இருங்கள்' (லூக்கா 12:35,36) என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இந்த வசனப்படி அவரது வருகைக்காகக் காத்திருப்போர் கதவு நிலையருகே உட்கார்ந்திருக்கும்படியான நிலையில் இருக்கவேண்டும். அப்படி அவர் வருகைக்காகக் காத்திருப்போரின் 3. அரைகள் கட்டப்பட்டிருக்கவேண்டும் 4. விளக்குகள் எரிகிறதாயிருக்கவேண்டும்.

3. அரைகள் கட்டப்பட்டதாயிருக்கவேண்டும்

'உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்' (1 பேதுரு 1:13) என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் ஓர் ஊழியன் இயேசு கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்கிறவனானால் அவன் தன் இருதயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” (மத். 5:8) என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். “இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்” (நீதி. 23:7) என்ற வசனப்படி எந்த மனிதனுடைய நினைவுகள் சுத்தமாயிருக்கிறதோ, அந்த மனிதனின் செயல்பாடுகளும் சுத்தமாயிருக்கும். “இருதயத்தின் நினைவினால் அவனவன் வாய் பேசும்” (லூக்கா 6:45) என்றார் இயேசு. அருமை ஊழியனே, உன் இருதயத்தில் அசுத்த எண்ணங்களை (இச்சை, பெருமை, பொறாமை, பேதமை, கசப்பு, கபடு, பொருளாசை, பேராசை, திருட்டு etc...) கொண்டு வருகையில் “பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்” (எபே. 4:27) என்ற வசனப்படி பிசாசுக்கு இருதயத்தில் இடங்கொடுத்துவிடாதே. சாத்தானால் சிந்தனையில் அசுத்தத்தைத் தூண்டத்தான் முடியும். அசுத்தமான எண்ணங்களைச் சாத்தான் உள்ளத்தில் தூண்டும்போதே, “தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் ஓடிப்போவான்” (யாக். 4:7) என்ற வசனப்படி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அசுத்த எண்ணத்தைத் தூண்டுகிற சாத்தானை 'வேதவசனத்தைக்' கொண்டு எதிர்த்து நில் அப்பொழுது, அவன் உன்னை விட்டு ஓடிப்போவான். ஆனால் சாத்தான் தூண்டுகையில் வசனத்தைக்கொண்டு எதிர்க்காதேபோனால் உள்ளத்தில் புகுந்துவிடுவான். அதன்பின் கிரியைகளினாலே உன்னை அசுத்தனாக்கிவிடுவான். உதாரணமாக, 'சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து (அப்போஸ்தலன்) அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு' (யோவான் 13:2) என்ற வசனப்படி இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்கும்படி சாத்தான் யூதாஸ்காரியோத்தின் இருதயத்தைத் தூண்டத்தான் செய்தான். எண்ணத்தைக் கொண்டுவரும் சாத்தானை எதிர்க்கவில்லை. நடந்தது என்ன? '.....சாத்தான் அவனுக்குள் புகுந்தான்' (யோவான் 13:27). சாத்தான் புகுந்தபின் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்..



அருமை ஊழியனே, இயேசு வருகையில் இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவோம் என்பதை மறந்துவிடாதே. அவருடைய வருகைக்காக நீ காத்திருப்பது உண்மையானால் சாத்தான் தேவையற்ற அல்லது அசுத்த எண்ணத்தால் உன்னைத் தூண்டும்போதே அவனுக்கு இடம் கொடாது, 'நான் தேவனுக்குக் கீழ்ப்படிவேன்' என எண்ணி வசனத்தை வைத்தே சாத்தானை எதிர்த்துவிடு, அவன் ஓடிப்போவான். 'நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து எனும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்' (பிலி. 3:20) என்ற ஊழியனாகிய பவுல் 'நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல், நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்' (1 கொரி. 11:1) என்று சொல்லுமளவிற்கு சாட்சியாக வாழ்ந்தான். அதற்குக் காரணம் என்ன? 'எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பெலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்' (2 கொரி. 10:4,5) என்று கூறுகிறான். அப்படியானால், தேவன் விரும்பாத எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வாஞ்சித்து, அவைகளை சிறைப்படுத்துகிறான். இயேசுவின் வருகைக்கு நீ காத்திருப்பது உண்மையானால் அசுத்த எண்ணங்கள் உன் மனதில் புகுந்துவிடாதபடி, அவைகளை உடனே சிறைப்படுத்தி உன் உள்ளத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள். அதேசமயம் உன் இருதயத்திலே கவலைகளை வைத்து, நீ கர்த்தருக்குள் உற்சாகமாகிவிடாதபடி செய்யப்பார்ப்பான். உன் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிட்டு தெளிந்த புத்தியுள்ளவனாயிரு.. 'கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள்' (சங். 31:34) என்ற வசனப்படி ஊழியனே, நீ தீய எண்ணங்களுக்கோ, கவலைகளுக்கோ இடங்கொடாது திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு.

4. விளக்குகள் எரிகிறதாயிருக்க வேண்டும்

'உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்' (லூக்கா 12:35,36) என்றார். இயேசு மூன்றாவதாக, அரைகள் கட்டப்பட்ட நிலையில் அவருக்குக் காத்திருக்கிறவர்களின் விளக்குகள் எரிகிறதாகவும் இருக்க வேண்டும்.

'கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு' (லூக்கா 11:34,35) என்றார் இயேசு. அப்படியானால் சரீரத்தின் விளக்கு கண்களே. 'சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக; உங்கள் ஆவி ஆத்துமா சரீரமுழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக' (1 தெச. 5:23) என்று வேதம் சொல்லுகிறது. இயேசு கிறிஸ்து நினையாத நாழிகையிலே வருகையில் ஆவி (எண்ணம்), ஆத்துமா, சரீரம் முழுவதும் குற்றமில்லாது காக்கப்படவேண்டும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. கண் (பார்வை) கெட்டுப்போனால் சரீரம் இருளடையும் (பாவமாகும்). இன்றைய ஆவிக்குரிய உலகில் அநேக ஊழியர் கண்களைச் சுத்தமாகக் காத்துக்கொள்ளாததால் சரீரத்தைப் பாவத்துக்குள்ளான நிலைமைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். இஸ்ரவேல் புத்திரரைப் பெலிஸ்தர் கையினின்று மீட்கவே, தேவன் சிம்சோனை நியாயாதிபதியாக ஏற்படுத்தினார். ஆனால் அவன் கண்களிலே ஜெயம் இல்லாத சிம்சோன் ......பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு திரும்ப வந்து தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; .....அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ள வேண்டும் என்றான்' (நியா. 14:1-3). அதோடுமாத்திரமல்ல, 'பின்பு சிம்சோன் காசாவுக்குப்போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்' (நியா. 16:1) என்று வேதம் கூறுகிறது. சிம்சோனுக்கு கண் பார்வையில் வெற்றியில்லை. ஆகவே பெண்களை இச்சிக்கிறவனாகவும், இச்சைகளின்படி செயல்படுகிறவனாகவும் மாறினான். இந்த இச்சையினாலே தெலீலாள் எனும் ஒரு ஸ்திரீயோடு சிநேகமானான். அவளோ அவனைத் தன் மடியிலே படுக்க வைத்து அவனது உயிருக்கு கண்ணியாய் மாறினாள். சாலொமோன் 'என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை' (பிர. 2:10) என்று கூறுகிறான். ஆகவே கண்களிலே இச்சையுள்ள சாலொமோனுக்கு வெறும் 700 மனையாட்டிகளும், 300 மறுமனையாட்டிகளுமே. அருமை ஊழியனே, விளக்காகிய கண்கள் இருளடைந்தபடியால் (கெட்டுப்போனபடியால்) சரீரத்தில் இருளடைந்த அநேக ஊழியரை அறிவேன். உன் கண்கள் எப்படி உள்ளது? இயேசு வரும்போது உடனே அவரைச் சந்திக்கும்படி உன் விளக்குகள் (கண்கள்) எரிகிறதாக (சுத்தமாக) இருக்கட்டும். உன் விளக்குகள் (கண்கள்) பொருள்மேலே இச்சையுண்டு அதினால் உன் சரீரம் கெடக்கூடாது. எரிகோவைப் பிடிக்கையில், யோசுவா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, 'எரிகோவில் சாபத்தீடானதொன்றையும் எடுக்கக்கூடாது' என கட்டளையிட்டிருந்தான். அப்படியிருந்தும் சாபத்தீடானதில் பாபிலோனிய சால்வை, வெள்ளி, பொன் இவைகளை ஆகான் என்பவன் எடுத்துக்கொண்டான். எதினால் எடுத்தான்? .....பாபிலோனிய சால்வையையும், 200 வெள்ளிச்சேக்கலையும், 50 சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்' (யோசுவா 7:21) என்று ஆகானே தன் வாயினாலே அறிக்கையிடுகிறான். ஊழியனே, பொருள்களைக் கண்டதும் இச்சை வருகிறதா? அப்படியானால் கண் இருளாயிற்று என அர்த்தம். அப்படியானால் நீ இயேசுவைத் தரிசிக்க முடியாது. தாவீது பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு மீட்பை உண்டாக்கியபோது, இஸ்ரவேலின் ஸ்திரீகள் சவுல் கொன்றது ஆயிரம்; தாவீது கொன்றது பதினாயிரம் எனப் பாடினார்கள். அதைச் சகிக்க முடியாத சவுல் தாவீதை காய்மகாரமாகப் பார்த்தான். எனக்குத் தெரிந்து காய்மகாரம் என்பது பொறாமை என எண்ணுகிறேன். அப்படியானால் பொறாமையின் பார்வையால் கண் இருளாகும். பொறாமை எப்போ வரும்? பெருமையிருப்பவனுக்கே பொறாமை வரும். அநேக ஊழியரின் கண்கள் இப்படிப் பொறாமைப் பார்வையால் விளக்குகள் அணைந்து போன நிலையில் உள்ளனர். ஊழியனே, உன் நிலை என்ன? உன் விளக்குகள் எரிகிறதானால் (சுத்தமாயிருந்தால்) இயேசுவின் வருகையில் காணப்படலாம்.

இயேசு வாசலருகே வந்துவிட்டார். ஆகவே அவருடைய வருகையில் அவரைச் சந்திக்கக் காத்திருக்கும் என் அருமை ஊழியனே, 1. வாசலருகே நித்தம் (ஜெப நிலைமையிலே) விழித்திரு 2. கதவு நிலையருகே காத்திருந்து வசனத்துக்கு நடுங்கி செயல்படு 3. மனதின் அரைகள் கட்டப்பட்ட (பாவ நினைவோ, கவலைகளோ) நிலைமையில் செயல்படு 4. விளக்குகள் (கண்கள்) எரிகிறதாக (சுத்தமாக-அடுத்த பாலினத்தின்மேல் இச்சையில்லாது, பொருள்கள்மேல் இச்சையில்லாது, மற்றோர்மீது பொறாமைக்கொள்ளாது) இருக்கட்டும். இயேசு வருகிறார். காத்திருக்கும் நாம் அவரோடு மகிமையடைவோம். மாரநாதா!!

கர்த்தரின் வேலைக்காரன்
P. அற்புதராஜ் சாமுவேல்

<u>வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:</u> தயவுசெய்து உங்கள் ஆண்டு சந்தா ரூ 100 கொடுத்து புதுப்பித்துக்கொள்ளுங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட பத்திரிக்கை கிடைத்தாலோ அல்லது பத்திரிக்கை கிடைக்கவில்லையென்றாலோ தயவுசெய்து 9677050234 என்ற தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

**கர்த்தருடைய வேலைக்காரனாகிய P.அற்புதராஜ் சாமுவேல் பங்கேற்கும் கூட்டங்கள்**

| அக்டோபர் | இடம் | தொடர்புக்கு |
|---|---|---|
| 2 | ராஜபாளயம் | 8754507827 |
| 3,4 | ராமாபுரம் | 9841556026 |
| 20 | அயனாவரம் | 9934144907 |
| 24 — 26 | சாத்தான்குளம் | 9488880612 |
| 31 | அயனாவரம் | 8825618749 |
| நவம்பர் | இடம் | தொடர்புக்கு |
| 6,7 | சிதம்பரம் | 9750263298 |
| 17 | அயனாவரம் | 9934144907 |
| 21 - 23 | அரமனை | 9486942933 |

# பாதை அறியாதோருக்கு பாதை காட்டியவர்கள்





## எம்மா ஒயிட்மோர்



Wantagh LIRR Station Agent Emma Whitmore

1890 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் ஏழைகளின் வாழ்வில் ஒளிபிறந்த நாள். நம்பிக்கையற்று நடைப்பிணங்களாக வாழ்ந்தவர்களுக்கு, உயிரில் உற்சாகம் வந்த நாள். தங்க இடமின்றி வீதிகளிலும், சாலை ஓரத்திலும் ஆதரவற்றவர்களாக தங்கள் காலத்தைக் கழித்தவர்களுக்கும் இன்பம் பிறந்த நாள்.

எம்மா ஒயிட்மோர், ஆதரவற்ற ஏழைப் பெண்களின் தாயாராக, அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யும் உற்ற நண்பராக தன்னுடைய பணியை இந்நாளில் ஆரம்பித்தார்.

அமெரிக்காவில் "நம்பிக்கையின் வாசல்" என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

12 வருடங்கள் மிகுந்த மன வேதனையுடனும், சரீர சுகவீனத்திலும் காணப்பட்ட எம்மா ஒயிட்மோரை ஆண்டவர் அற்புதவிதமாக சுகப்படுத்தினார். இவரைக் கொண்டு, தான் செய்யப்போகும் திட்டத்தை, தெளிவாக கற்றுக்கொடுத்தார். ஆண்டவரின் சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்தார் ஒயிட்மோர்.

தமது செல்வங்களையெல்லாம் ஏழைகளின் நலனுக்காக செலவிட்டார். ஏராளமான சமுதாய சேவைகளில் தன்னை ஈடுபடுத்தினார். கிறிஸ்துவின் அன்பை, வார்த்தைகளில் பிரசங்கிப்பதை விட அதிகமாக செயலில் காட்டினார். நடமாடும் கிறிஸ்துவைப் போன்று, தான் செல்லுமிடமெங்கும் நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். பெண்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். பல குடும்பங்களின் ஏழ்மை நிலைகளை மாற்றி, அவர்களின் வளர்ச்சிக்கு உதவி செய்தார். குடும்பங்களிலிருந்து கைவிடப்பட்டு, எதிர்காலத் திட்டம் ஏதுமின்றி, சாலையோரங்களில் அலைந்துகொண்டிருந்த பெண்களைத் தேடிக் கண்டுபிடித்தார். அவர்களுக்காக நம்பிக்கையின் வாசல் என்ற அமைப்பை ஏற்படுத்தி புது வாழ்வைக் கொடுத்தார். அனைத்திற்கும் மேலாக அவர்கள் வாழ்விற்கு நம்பிக்கையைக் கொடுத்தார்.

1931 ஆம் ஆண்டு, அவர் தன் வாழ்வை இவ்வுலகத்தில் முடிக்கும்போது 100க்கும் மேற்பட்ட நம்பிக்கையின் வாசல் அமைப்புகள் உலகெங்கும் காணப்பட்டன.

## தாமஸ் கெம்பர்



திருநெல்வேலிச் சீமையில் தாமஸ் கெம்பர் என்ற உண்மையான ஊழியர் வாழ்ந்து வந்தார். இவர் ஒரு சிறந்த ஜெப வீரர். நற்குணங்களும், நற்செயல்களும் நிரம்பப் பெற்றிருந்தார். தன்னை நாடி வரும் எவருக்கும் வாடாமல் வழங்கும் வள்ளல் இவர். தூய்மையான வாழ்வையும் எளிமையான குணங்களையும் உடையவர்.

அன்று ஒரு நாள். கிறிஸ்தவ ஊழியர்களுக்கென ஒரு தியானக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சபை ஊழியர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த வாஞ்சையுடன் அதில் பங்கு பெற்றனர். சிலர் காரசாரமாக மோதிக் கொண்டாலும், பலரின் தெய்வீக குணங்கள் அங்கே பளிச்சிட்டன.

ஒரு சபை ஊழியர் சற்று வித்தியாசமான தோற்றத்துடன் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தார். கண்களிலே கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. எப்படியும் அவரை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்பது அவரின் முடிவாக காணப்பட்டது. அவர் கையிலே வழக்கு தொடர்வதற்கான காகிதக் கட்டுகள் காணப்பட்டன. இக்காட்சியை தூரத்திலிருந்து கவனித்தார் தாமஸ் கெம்பர் ஐயர். மிகவும் வேதனையடைந்தவராக, அவரைக் கண்டும் காணாதவர்போல் கூட்டத்தை ஆரம்பித்தார். அந்த சபை ஊழியரோ உள்ளே வர மனமற்றவராக வெளியே இன்னும் தொடர்ந்து அங்கும் இங்குமாக நடந்துகொண்டிருந்தார்.

கெம்பர் ஐயருக்கு மிகுந்த கோபம் வந்தது. பூமி அதிரத்தக்கதாக தம் உடலை குலுக்கினார். ஐயருக்கு ஏதோ ஆகிவிட்டது என்று எல்லோரும் பயந்தார்கள். மீண்டுமாக தன் உடலை இன்னும் அதிகமாக குலுக்கிவிட்டு, அந்த ஊழியரைச் சுட்டிக்காட்டி, "பிறர் மீது குற்றம் சுமத்துவதற்காக காகித கட்டுகளுடன் வந்திருக்கும் ஊழியக்காரனே! இயேசுகிறிஸ்து வரும்போது நீரும் இப்படித்தான் நடுங்குவீர்" என்று கூறி, மகா பயங்கரமாக அவ்வாலயம் அதிரும்படியாக நடுங்கிக் காட்டினார். உடன் ஊழியர்கள் யாவரும் பிரமித்தும் திகைத்தும் நின்றனர். அவ்வூழியரோ தன் தவறை உணர்ந்தவராக, அக்காகித கட்டுகளை கிழித்து எறிந்துவிட்டு மன்னிப்பு கேட்டார். இவ்விதமாய் ஊழியர்களையும், மக்களையும் மனந்திரும்பச் செய்து மகத்தான பணிகளை நிறைவேற்றி முடித்தார் கெம்பர் ஐயர்.




# இயேசு மனுஷருடைய தயவிலே அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்

"நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்" (1 பேதுரு 2:21) என்று வேதம் கூறுகிறபடி, நாம் நமக்கு மாதிரியான இயேசுவை முன்வைத்து வாழ்வோம்.

"இயேசுவானவர் ...மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:52) என்ற வசனத்தின்படி, இயேசுகிறிஸ்து மனுஷருடைய தயவிலே அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். அப்படியே நம்முடைய வாழ்க்கையிலே மனுஷருடைய தயவு நமக்கு நிச்சயம் தேவை.

"திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்" (நீதி. 22:1) என்ற வசனத்தின்படி, பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம். ஒருவேளை ஒரு மனிதன் கோடிஸ்வரனாக சகலவிதமான ஆசீர்வாதத்தோடு இருந்தாலும் மனுஷருடைய தயவு இல்லாவிட்டால் அவன் வைத்திருக்கிற அத்தனை ஐசுவரியமும் வீணாய் போகும். மனுஷர் கண்களில் தயவு கிடைக்க செய்கிறவர் தேவனே. உதாரணமாக, "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார்" (தானி. 1:8,9) என்ற வசனங்களின்படி, பிரதானியின் கண்களிலே தானியேலுக்கு தயவு கிடைக்க செய்தவர் கர்த்தரே.

அதோடுமாத்திரமல்ல "கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்" (ஆதி. 39:2-4) என்ற வசனங்களின்படி, தேவனே யோசேப்புக்கு எஜமானாகிய போத்திபாரின் கண்களிலே தயவு கிடைக்கச் செய்தார். அப்படியே "...இந்த ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கப்பண்ணுவேன்; நீங்கள் போகும்போது வெறுமையாய்ப் போவதில்லை" (யாத். 3:21) என்ற வசனத்தின்படி, தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களிலே தயவுகிடைக்க செய்தபடியினாலே அவர்கள் கேட்ட பொன்னுடைமைகளையும் வெள்ளியுடைமைகளையும் வஸ்திரங்களையும் எகிப்திய ஜனங்கள் இஸ்ரவேலருக்குக் கொடுத்தார்கள்.

தேவன் எப்பொழுது ஒரு மனிதனுக்கு மற்ற மனுஷர்களின் கண்களில் தயவு கிடைக்க செய்வார்?

1. தேவனைத் துதிப்பதால்

"...தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள்" (அப். 2:47) என்ற வசனத்தின்படி, தேவனை அதிகமாய் துதிக்க துதிக்க தேவன் மனுஷருடைய கண்களிலே நமக்கு தயவு கிடைக்கப்பண்ணுவார். இன்றைக்கு அநேகர் மனுஷருடைய கண்களிலே தயவுகிடைக்க வாஞ்சித்து அவர்களைப் புகழ்கிறார்கள் (துதிக்கிறார்கள்). உங்களுக்கு மனுஷருடைய கண்களிலே தயவு கிடைக்க வேண்டுமென்றால் தேவனை துதிக்கிறவர்களாயிருங்கள்.

2. நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுவதால்

மற்றவர்களுக்கு நன்மை செய்யும்படி ஜாக்கிரதையோடு செயல்படுவோம். அப்பொழுது தேவன் மனுஷருடைய கண்களிலே நமக்கு தயவு கிடைக்க செய்வார்.

3. நல்ல புத்தியுடையவர்களாய் இருப்பதால்

"தாவீதுராஜா பகூரிம்மட்டும் வந்தபோது, இதோ, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக்கொண்டே நடந்துவந்து, சகல ஜனங்களும், சகல பலசாலிகளும், தாவீதின் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் நடக்கையில், தாவீதின்மேலும், தாவீதுராஜாவுடைய சகல ஊழியக்காரர்மேலும் கற்களை எறிந்தான். சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப்பழியைத் திரும்பப்பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான். அப்பொழுது செருயாவின் குமாரன் அபிசாய் ராஜாவை நோக்கி: அந்தச் செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப்போடட்டுமே என்றான்.

அதற்கு ராஜா: செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான். பின்னும் தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து: இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத் தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான், அவன் தூஷிக்கட்டும்; அப்படிச் செய்ய கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" (2 சாமு. 16:5-12) என்ற வசனங்களின்படி, அப்சலோம் தாவீதின் ராஜ்யபாரத்தைப் பிடித்துக்கொண்டபோது, அப்சலோமுக்குப் பயந்து தாவீது எருசலேமை விட்டு கடந்து போனான்.

அப்பொழுது சவுலின் உறவினனான சீமேயி, தாவீதின்மேல் கற்களை வீசி அவனைத் தூஷிக்கிறவனாய் இருந்தான். அப்பொழுது அவனோடுகூட வந்த அபிசாய் அவனைக் கொல்லட்டுமா என்று கேட்டான். ஆனால் தாவீதோ அவனைக் கொல்லாதே தேவன் அப்படி செய்ய அனுமதித்திருக்கிறார் என்று சொல்லி அபிசாயை அடக்குகிறவனாயிருந்தான். அருமையானவர்களே, தாவீதினுடைய நல்ல புத்தியைப் பாருங்கள். தேவன் அவனுக்கு தயவு செய்கிறவராயிருந்தார்.

அதோடுமாத்திரமல்ல “பின்பு தாவீது எழுந்து, சவுல் பாளயமிறங்கின இடத்திற்குப் போய், சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேர் என்னும் அவன் படைத்தலைவனும் படுத்துக்கொண்டிருக்கிற இடத்தைப் பார்த்தான்; சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்துக்கொண்டிருந்தான்; ஜனங்கள் அவனைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்தார்கள். தாவீது ஏத்தியனாகிய அகிமெலேக்கையும், செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமாகிய அபிசாயையும் பார்த்து: என்னோடேகூடச் சவுலிடத்திற்குப் பாளயத்தில் இறங்கிவருகிறவன் யார் என்றதற்கு, அபிசாய்: நான் உம்மோடேகூட வருகிறேன் என்றான். அப்படியே தாவீதும் அபிசாயும் இராத்திரியிலே அந்த ஜனங்களுக்குள்ளே வந்தார்கள்; இதோ, சவுல் இரதங்களிருக்கிற இடத்திலே படுத்து நித்திரைபண்ணினான்; அவன் தலைமாட்டில் அவனுடைய ஈட்டி நிலத்திலே குத்தியிருந்தது; அவனைச் சுற்றிலும் அப்னேரும் ஜனங்களும் படுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அபிசாய் தாவீதைப் பார்த்து: இன்று தேவன் உம்முடைய சத்துருவை உம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டு குத்தாகக் குத்தாமல், ஒரே குத்தாக நிலத்தில் உருவக் குத்தட்டுமா என்றான். தாவீது அபிசாயைப் பார்த்து: அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்? என்று சொன்னான். பின்னும் தாவீது: கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய, நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இப்போதும் அவர் தலைமாட்டில் இருக்கிற ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டு போவோம் என்றான். தாவீது சவுலின் தலைமாட்டில் இருந்த ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்டபின்பு, புறப்பட்டுபோனார்கள்; அதை ஒருவரும் காணவில்லை, அறியவுமில்லை, ஒருவரும் விழித்துக்கொள்ளவுமில்லை; கர்த்தர் அவர்களுக்கு அயர்ந்த நித்திரை வருவித்ததினால், அவர்களெல்லாரும் தூங்கினார்கள்” (1 சாமு. 26:5-12) என்ற வசனங்களின்படி, சவுல் தாவீதுக்கு துரோகம் பண்ணி அவனைக்கொல்ல நினைத்தபோதிலும், சவுலைக் கொல்ல தாவீது விரும்பவில்லை. காரணம் அவனுடைய நல்ல புத்தியே. நல்ல புத்தி மனுஷனுக்கு தயை உண்டாக்கும். தேவன் எல்லாருடைய கண்களிலும் தாவீதுக்கு தயவு கிடைக்கச் செய்தார். அருமையானவர்களே, தேவனிடத்தில் உனக்கு தயவு கிடைக்க வேண்டுமென்றால் தீமையான புத்தியுடையவனாய் அல்ல, நல்ல புத்தியுடையவனாய் இரு.

4. கிருபையும் சத்தியமும் விலகாமல் காப்பதால்


“கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்” (நீதி. 3:3,4) என்ற வசனங்களின்படி, அருமையானவர்களே கிருபையும் சத்தியமும் உங்களை விட்டு விலகாதிருந்தால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயவு கிடைக்கும். அப்படியானால் கிருபை எப்பொழுது கிடைக்கும்? “அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது” (யாக். 4:6) என்ற வசனத்தின்படி, தாழ்மையாயிருக்கிறவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார். அதினிமித்தம் தயவு கிடைக்க செய்கிறார். அதோடுமாத்திரமல்ல அறிந்த சத்தியத்தை விட்டு விலகாமல் சத்தியத்தின்படி வாழும்போது தயவு கிடைக்கச் செய்கிறார்.



கிருபை விலகுவது எப்படி? “அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது” (யாக். 4:6) என்ற வசனத்தின்படி, தாழ்மையில்லாமல் பெருமையுள்ளவர்களாய் இருந்தால் கிருபை அவர்களை விட்டு விலகிவிடும். அப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய கண்களிலோ மனுஷருடைய கண்களிலோ தயவு கிடைக்காது. “பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்” (யோனா 2:8) என்ற வசனத்தின்படி, மாயை என்பது RC வேதாகமத்தில் விக்கிரகம் என்று எழுதியிருக்கிறது. ஆகவே யார் ஒருவர் மாயையான விக்கிரகத்தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் கிருபையை இழந்துவிடுகிறார்கள். கிருபையில்லாதிருந்தால் தேவனிடத்திலும் மனுஷனிடத்திலும் தயவு கிடைக்காது. கர்த்தர் வருகிறார். மாரநாதா!!

RNI Regn. No: TNTAM/2015/66452
**Printed and Published by: Sri. P. Arputharaj Samuel**, On Behalf Of: Zion Trust, From 27/37, James Street, Poonamallee, Tiruvallur District, Chennai – 600056
Printed at New Shenbagam Offset, 2/67, NGO Colony, Sivakasi West – 626124
**Editor : Pastor P. Arputharaj Samuel : Mobile No. 9677050234**

# நான் பெரியவனா?




கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராயிருந்த திரு.குருஷேவ், மாஸ்கோ நகர் தெருவில் கார் ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். ஒரு புகைப்படக் கடையில் தனது போட்டோக்கள் மட்டும் இருப்பதைக் கண்டார். கடைக்காரரிடம்: "என்னுடையப் படங்களை மட்டும் நீர் வைக்கக்கூடாது. எல்லாத் தலைவர்களுடைய படங்களையும் வைக்கவேண்டும்" என்றார். கடைக்காரர் சொன்னார்: "ஐயா, மற்ற எல்லாத் தலைவர்களின் படங்களும் விற்றுப்போயின" என்று.. நம்மைக் குறித்து அளவுக்கு மீறி நாம் நினைக்கக் கூடாது.



# முகஸ்துதி

மாணவத் தமிழ் கூடுகை ஒன்றில் பேசும்படியாக கவிஞர் கண்ணதாசன் அழைக்கப்பட்டிருந்தார். "காலங்களும் பாடல்களும்" என்ற தலைப்பில் அவர் பேசவேண்டியிருந்தது. அவர் பேசுவதற்கு முன்பாக, மாணவனொருவன் ஒரு கவிதையை வாசித்தான். யாரும் கைத்தட்டவில்லை. பின்பு கண்ணதாசன் அவர்கள் ஒரு கவிதையை வாசித்தார். பலத்தக் கைத்தட்டல் எதிரொலித்தது. கைதட்டல் நின்றவுடன் திரு.கண்ணதாசன் எழுந்து நின்று: "மாணவன் கவிதை வாசித்தபோது யாரும் கைத்தட்டவில்லை. உண்மையில் அவன் வாசித்த கவிதை நான் எழுதிய கவிதை. நான் வாசித்த கவிதை அவனுடையது. யார் வாசிக்கிறாரோ அதைப் பொருத்துதான் பாடலுக்கு வரவேற்பு கிடைக்கிற காலமிது. "காலங்களும் பாடல்களும்" என்பதன் கருத்து இதுதான்" என்றவுடன் அரங்கமே அதிர சிரிப்பொலி எழுந்தது. மற்றவர்களைப் பாராட்டுவதில் நேர்மையாயிருங்கள். முகஸ்துதி நல்லதல்ல.



# எளியவரை நினைத்துக்கொள்ளுங்கள்!

ரேவதி தன் மகனை மருத்துவரிடம் தூக்கிச் சென்று, "டாக்டர், இவனுக்குப் பசியே இல்லை. ஹார்லிக்ஸ் அல்லது ஆப்பிள் கொடுத்தாலும் சாப்பிட மாட்டேங்குறான்" என்றாள். பிள்ளையை டாக்டர் பரிசோதித்து விட்டு, சில இரத்தப் பரிசோதனைகள் செய்து, ஒரு டானிக் எழுதினார். டானிக்கை வாங்கிக் கொண்டு காரில் ஏறினார்கள். பிச்சை எடுக்கும் ஒரு பெண், எலும்பும் தோலுமான ஒரு பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்து, "ஐயா, அம்மா, ஏதாவது கொடுங்க. குழந்தை பசியாயிருக்கிறது, கொடுக்க ஒன்றுமில்லை" என்றாள். ரேவதி மறுபக்கமாகத் திரும்பிக் கொண்டாள். அவளது கணவர் ஒரு இருபது ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்தார். "பிச்சைக்காரிக்கு ஏன் இருபது ரூபாய் கொடுக்கிறீர்கள்?" என்று ரேவதி சினந்து கொண்டாள். கணவர் சொன்னார்: "நமது மகனுக்குப் பசியில்லை. டாக்டருக்கு, இரத்தப் பரிசோதனைக்கு, டானிக்குக்கு என்று 500 ரூபாய் செலவழித்திருக்கிறோம். இங்கேயோ பசியால் வாடும் ஒரு குழந்தைக்கு ஆகாரமில்லை. 20 ரூபாய் கொடுப்பது தவறா?" என்றவுடன் ரேவதியின் கண்கள் திறந்தன. அவள் மனம் வருந்தினாள். ஏழைகளை மறந்துவிடாதீர்கள்!

PATHAIKKU VELICHHAM - MONTHLY
Posted at Egmore RMS, Patrika Channel, Chennai - 08.

Registered with the Registrar of News Paper of India under Regn. No. TNTAM/2015/66452
Postal Registration No. TN/TBM/193/2024-2026
TN/PMG(CCR)/WPP 647/2024-2026
Published on 25th of every month
Posting on 11th - 15th of October 2025
Licensed to post without prepayment

## மத்தேயு 28 : 1 - 10

1. ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்.

2. அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான்.

3. அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது.

4. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்.

5. தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்.

6. அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்;

7. சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.

8. அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.

9. அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.

10. அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.

சீயோன் சபை வழங்கும் "பரிசுத்தத்தின் நேரம்" சால்வேஷன் T.V. யில் ஒவ்வொரு ஞாயிறும் மதியம் 02:30 மணிக்கு காணத்தவறாதீர்கள்

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' Heaven TV TCCL Cable மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 717, 816 Channel களிலும், மற்ற மாவட்டங்களில் 729, 715 Channel களிலும் ஒவ்வொரு ஞாயிறும் இரவு 9:30 மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது. மேலும் இணையதளத்தில் 'Heaven TV India' என்ற Mobile App மூலமும் காணலாம்.

சீயோன் சபை வழங்கும் 'பரிசுத்தத்தின் நேரம்' நம்பிக்கை டிவியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கு காணத்தவறாதீர்கள்

நம் வாசகர்கள் மேலும் சத்தியத்தினைச் சத்தியமாய் அறிந்துகொள்ள வீடியோ மற்றும் ஆடியோ செய்திகள் நம்முடைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### Social Links

zion-church-poonamallee
www.zionchurch.co.in
zion.church.poonamallee
ZionChurchPoonamallee
ZionChurchPoonamallee
zionchurchpoonamallee@gmail.com

STAY BLESSED

<u>குறிப்பு:</u> தூய வேதாகமம் மாற்கு 16:15,16 ன் அடிப்படையிலும், இந்திய அரசு சட்டம் ஷரத் 25 ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தின் அடிப்படையிலும் இப்பத்திரிக்கை பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. யாரையும் கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ, நயங்காட்டியோ, மோசடியான முறையிலோ மதம் மாற்றுவது இப்பத்திரிக்கையின் நோக்கமல்ல.

Name

PIN

*If undelivered, please return to*

P. Arputharaj Samuel
Pastor - Zion Church
27/37, James Street,
Poonamallee,
Chennai - 600056
044 - 26274745, 9677050234
chennaizion@gmail.com
www.zionchurch.co.in